தென்மொழி

முன்னேற்றங் காண்போம் முனைந்து!

முன்னைப் பெருமையெலாம்
   முற்றும் இழந்தாலும்
அன்னைத் தமிழிருக்க
   அச்சமேன்? - இன்னே
பழிதுடைத்துக் கொள்ளுதற்குப்
   பைந்தமிழா உன்றன்
விழிதுடைத்துக் கொள்வாய் விரைந்

பல்துறை நல்லறிவும்
   பாங்குற வூட்டுதற்கு
வல்ல தமிழிருக்க
   வாட்டமேன்? - வெல்லச்
சிலிர்த்தெழுவாய் செந்தமிழா
   சீர்த்தவர லாறு
கலித்திடக் காண்போம் கடிது!

ஆய கலைகளெலாம்
   ஆய்ந்து நலங்கொள்ளத்
தூய தமிழிருக்கத்
   தொய்வதேன்? - மாயத்தால்
தன்னை மறந்த
   தமிழா தெளிந்தெழுவாய்
முன்னேற்றங் காண்போம் முனைந்து

- இ

உள்ளே...

அம்பலப்படுத்தப்படும் ஊழல்களும் அடுத்த கட்ட சிந்தனையும்!

பாவலரேறு பொதுமையர்

குமரித் தமிழர் நிலை!

திரு

ஏற்றம் காண்போம்!

மக்களவை

தமிழினம் கெடவோ தமிழ்ப்படங்கள்?

செய்திகள்

மற்றும் பிற...

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

டி - 29

என்னினும் என்ன,
இன்று இவர்கள் அடிமைகள்!

முன்னந் தோன்றிய நிலத்தில் முகிழ்த்தவர்!
மூத்த தமிழ்மொழிக் குணர்வின் மூத்தவர்!
தென்னன் பாண்டியன் குமரிக் குடிமையர்!
திசையெ லாம்பரந் துலகை அளந்தவர்!
இன்னரும் இயலிசை நாடகம் யாத்தவர்!
இந்திய - நாவலந் தேயத்து இறைமையர்!
என்ன வியப்படா? - இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன இன் றிவர்கள் அடிமைகள்!

வான்முகில் மலையிடை வாழ்க்கை தொடங்கியர்!
வளந்தரு குறிஞ்சியில் காதலை உணர்ந்தவர்!
தேனுமிழ் முல்லையை மருதம் நெய்தலைத்
தீர ஆய்ந்துநல் இல்லறம் வகுத்தவர்!
கான்தரு பொருளையும் கழனியும் கண்டவர்!
கடலின் பரப்பையும் கடந்தயல் சென்றவர்!
ஏன்,தம்பி தெரியுமா? - இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன,இன் றிவர்கள் அடிமைகள்!

கல்லைக் கல்லொடு மோதிய கனப்பினர்!
காய்ச்சி இரும்பினை உருக்கிடக் கற்றவர்!
சொல்லைச் சொல்லொடும் பொருத்தி மொழியெனச்
சுடர்விடும் உணர்வினுக் குருவம் வரைந்தவர்!
வில்லைப் புலியினைக் கயலைக் கொடியினில்
வெள்ளைப் பனிமலைத் தலையில் பொறித்தவர்!
எல்லைப் புகழினர் - இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன,இன் றிவர்கள் அடிமைகள்!

தொன்று தொட்ட பெருமையின் தோன்றல்கள்!
தோல்வி என்பதே தோன்றிடா வீரர்கள்!
கன்று முட்டிய பாலைக் குடிப்பினும்
காதலில், வீரத்தில் எச்சில், காணாதவர்!
குன்றையும் மலையையும் கொடையாய் வழங்கியர்!
கோடி இலக்கிய இலக்கணம் கண்டவர்!
என்றோ பிறந்தவர்! - இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன,இன் றிவர்கள் அடிமைகள்!

காற்றையும் கையினிற் பிடித்துப் பழகியர்!
கல்லையும் கூழ்போல் கரைத்துக் குடிப்பவர்!
ஆற்றையும் வளைத்தணை கட்டிப் பாய்ச்சியோர்!
அண்ட வெளிக்கதிர் மண்டிலம் அளந்தவர்!
கூற்றையும் எதிர்த்தவர்! கொள்கை வளர்த்தவர்!
கூர்தல் அறத்தையும் உயிரையும் உணர்ந்தவர்!
ஏற்றமென் சொல்லுவேன்? - இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன,இன் றிவர்கள் அடிமைகள்!

" கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி
மொழி—இனம்—நாடு.

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 29) தி.பி.உ0உஅ - சுறவம் (சனவரி - '97) (ஓலை - 1

அம்பலப்படுத்தப்படும் ஊழல்களும் அடுத்த கட்ட சிந்தனையும்!

மாநில மட்டத்திலும் நடுவணரசு நிலையிலும் கடந்த காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் செய்த மாபெரும் ஊழல்கள் இன்று வெளிக் கொணரப்பெற்று மக்களைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்துகின்றன. போபர்சு தகரி, நீர்மூழ்கி, சுவிசு வைப்பகம் என்றெல்லாம் பேர்பெற்ற ஊழல் பெருச்சாளி இராசீவ் காந்தியேகூட இன்றிருந்தால் இவற்றைக் கண்டு நாணமுறக்கூடும்! முந்தைய ஆட்சியாளர்கள் மீது உசாவல், தளை, சிறைவைப்பு, விடுதலை கோரிக்கை, பொறுப்பில் விடுதலை அடுத்த நடவடிக்கை என்பனவெல்லாம் அன்றாடம் தாளிகைகளை நிரப்பும் பரபரப்புச் செய்திகள்!

இத்தகைய நிலைகள் குடியாட்சி முறையின் மீதே மக்கள் நம்பிக்கை இழக்கச் செய்கின்றன. தேர்தல் என்பது சூதாட்டம் என்னுமாறு இழிநிலைப்பட்டுவிட்டது. குறைந்த அளவிலேனும் உரிமை பெற்றுள்ள நாடாளுமன்றக் கட்டமைப்பின் நடைமுறைகளெல்லாம் நகைப்புக் கிடமாகிவிட்டன.

உண்மையில், குடியரசுத் தலைமை ஈறான அனைத்துப் பொறுப்புகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றக் கட்டமைப்பின் நடைமுறைகளே குடியாட்சியமைப்புக்கு அடிப்படையானவை. ஆயிரங் குறைபாடுகள் முளைப்பினும் கிளைப்பினும் அவை முறையாகக் களைந்தொழிக்கப்பட்டு அந் நடைமுறைகளைச் செழித்தோங்க செய்தலே குடியாட்சி முறையில் நம்பிக்கையுள்ள அனைவருக்கும் கடமையாகும். 'அரசியல் என்பது கயவர்களின் கடைசிப் புகலிடம்' என்று முணுமுணுத்து ஏளனம் பேசுவதாலோ, எட்டி விலகிப் போய்விடுவதாலோ நிலையைச் சீர்ப்படுத்திவிட முடியாது.

இது ஒருபுறமிருக்க, மக்களாட்சியில் சட்டமன்ற அமைப்பைப் போலவே மற்றொரு தூணான ஆளுமை (நிர்வாக)த் துறையின் நிலை என்ன? ஆளுமைப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளெல்லாம் எவ்வளவுதான் ஊழலில் திளைத்தாலும் அரசியல்காரர்களைப் போல் அவர்கள்மீது சொல்லடிகளும் கல்லடிகளும் விழுவதில்லை!

அரசியல்காரர்களிடையே, ஆளும்பொறுப்பேற்ற ஒரு கட்சியினர் ஊழல் செய்தால் மற்றக் கட்சிக்காரர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்; குற்றஞ்சாட்டுகிறார்கள்; மேடை போட்டுப் பேசுகிறார்கள்; தாளிகைகள், செய்தி நிறுவனங்கள் அம்பலப்படுத்துகின்றன. மக்களுக்குத் தெரிகிறது. ஆனால் அதிகாரிகளின் ஊழல்கள் எளிதில் வெளிப்படுவதில்லை; வெளிப்பட்டாலும் விளம்பரப்படுத்தப்படுவதில்லை.

ஊழல் மக்களுக்குத் தெரிகிற போது அரசியல்காரர்கள் ஐந்தாண்டளவிலாவது தேர்தல் முறையால் வீழ்த்தப்படுகிறார்கள். நடவடிக்கைகளுக்கு ஆளாகிறார்கள். ஆனால், அதிகாரிகளைப் பொறுத்தவரை அந்நிலை இல்லை. அவர்கள் குற்றஞ்சாட்டப் பட்டாலும் வெளிப்படையாகவே தெரிந்தாலும் அவர்களை இடம் மாற்றுவதுகூடத் தண்டனையாகக் கருதப்படுகிறது. குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுப் பணிநீக்கமும் தண்டனையும் பெற்ற அதிகாரிகள் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணத் தக்க அளவினதாகவே இருக்கும்.

தலைமை யமைச்சர், முதலமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள் அனைவரும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் யாவரும் தேர்தலில் பொய்க்கணக்கே காட்டுகிறார்கள் என்று அரசியல் காரர்களைக் குற்றஞ்சாட்டுகிறாரே முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரி சேசன், இது தெரிந்தும் அவர் ஏன் அக் குற்றங்களைக் கண்டு பிடிக்கவில்லை? பாதுகாப்பான பதவிகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருக்கும் போது இப்படிப் பொதுப் படையாகச் சிலவற்றைக் கூறிக் கண்ணியம் மக்கவர் என்று நல்ல பெயர் வாங்கிக் கொண்டால் போதுமா?

அதிகாரிகள் அரசியல்காரர்களுக்கு உடந்தையாக இருப்பதால் தானே எத்தகைய ஊழல்களும் அரங்கேற முடியும்! இதுபற்றி யாரும் மூச்சுப் பரிவதில்லையே ஏன்?

அண்மையில் அதிகாரிகள் சிலர்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், அரசியல்காரர்கள் சிலர்மீதான நடவடிக்கைகளை யொட்டியனவே.

அரசியல்காரர்களைப் பொறுத்தவரை ஊழல் மேற்புண்ணாக வெடித்து நாற்றமடிக்கிற தென்றால், ஆளுமை (நிர்வாக)த் துறையைப் பொறுத்தவரை ஊழல் உட்புண்ணாகப் புரையோடிக் கிடக்கிறது!

மக்களாட்சி முறை சிறப்புறுவது தேர்ந்தெடுக்கப்படும் மக்கட் படிநிகராளியரைக் கொண்ட நாடாளுமன்ற கட்டமைப்பினால் மட்டுமே. ஏனை நயன்மையும் ஆளுமையும் அத்தகைய சிறப்புக்குரியன அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாது அமர்த்தத்தினாலேயே பதவி பெற்ற நடுவர்களும், அதிகாரிகளுமே அவற்றை இயக்குகின்றனர்.

நாடாளுமன்றக் கட்டமைப்பில் தேர்தல்களின் வழிப் பார்ப்பனியம் ஒரு சிறுது அடிவாங்கினாலும், நயன்மை, ஆளுமைத் துறைகளில் அது சாய்கால் பெற்று. ஆகவே, நாடாளுமன்றக் கட்டமைப்பின் ஊழல்கள் சிற்சில அம்பலப்படுத்தப்பட்டு அரசியல்காரர்கள் இழிவுபட்டு ஏளனத்துக்கு ஆளாகின்ற அளவுக்கு ஏனை இரு துறைகளிலும் ஊழல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை; அத்துறையைச் சார்ந்தவர்கள் பார்ப்பனியத்தால் கட்டிக் காக்கப்படுகின்றனர்; அவர்கள் மேன் மக்களாகச் சித்திரிக்கப் படுகின்றனர். திரு சேசனைச் சிலர் 'உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பவர்' என்று உயர்த்திக் காட்டுவதும் இந்த அடிப்படையிலேயே தான்!

அதனாற்றான் அவர் ஓய்வுபெற்றபின்னும் அயல்நாட்டுத் தூதுவர் பதவி ஏற்கவோ, அயல்நாட்டுத் தூதுவர் பதவி ஏற்கவோ, வேறு பதவிகளில் அமரவோ தமக்கு விருப்பமில்லை என்றும் தாம் குடியரசுத் தலைவர் பதவி ஒன்றை மட்டுமே ஏற்க விரும்புவதாகவும் தாமே கூறித் திரிகிறார்.

மக்களாட்சிமுறை உண்மையிலேயே சிறப்புற வேண்டுமானால் நாடாளுமன்றக் கட்டமைப்பைப் போலவே நயன்மை, ஆளுமைத் துறைகளிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை இடம்பெற வேண்டும். அதற்கான சிந்தனை எழவேண்டும்!

- இறை

குமரித் தமிழர் நிலை

- ஞான. தோமா க.மு.

மொழிவாரி மாநிலங்கள் அமைப்புத் திட்டத்தின்கீழ், மலையாள நாட்டினின்றும் விடுபட்டுத் தமிழ் வழங்கும் குமரிமுனைப் பகுதிகள் சில தமிழகத்துக்கு உரிமையாயின. 1.11.1956 அன்று தமிழ் நாட்டில் குமரிமாவட்டம் தோன்றியது. 1948, '52 தேர்தல்களில் தேவிகுளம், பீர்மேடு உள்ளிட்ட பெருவாரியாகத் தமிழ்பேசும் ஈராயிரம் சதுரக்கல் பரப்புள்ள பகுதிகளில் போட்டியிட்டுத் தமிழ்மக்கள் பெருவெற்றி பெற்றிருந்தனர் ஆயினும், மலையாளத்தவரின் வலக்காரத்தாலும், மாநிலங்கள் புத்தமைப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான கே.எம். பணிக்கரின் ஒருதலைச் சார்பான தீர்ப்பினாலும் செங்கோட்டையின் கீழ்ப் பகுதி உட்பட அறுநூறு சதுரக்கல் பரப்பு மட்டுமே தமிழ்நாட்டுக்குச் சேர்ந்தது. தமிழ்மக்களின் ஈகங்களாலும் கடுமையான போராட்டங்களாலுமே குமரிமாவட்டம் தமிழ்நாட்டுக்குக் கிட்டியது என்பது குறிப்பிடத் தக்கது.

குமரி மாவட்டப் பகுதிகளில் பெரும் நில உடைமையர் மலையாளிகளே. தமிழ்மக்களோ கூலிகளாகவே உள்ளனர். தமிழ் பயிலாமல், தமிழ் பேசாமல் வணிகம் மற்றும் அரசு வினைகள் அனைத்தையும் மலையாள மொழியினாலேயே நிறைவேற்றுகின்றனர். மலையாளிகளைக் கண்டவுடன் பெரும்பாலான தமிழர்களும் மலையாள மொழியில் பேசுகின்றனர். மலையாளம் படிக்க வாய்ப்பு உண்டு. தமிழர்களுங்கூட மலையாளம் படிக்கின்றர். மலையாளிகள் மிகுந்த சாய்கால் பெற்று உள்ளனர்.

குமரி மாவட்டத்தில் கேரளத்தின் ஆளுமை!

குமரி மாவட்டத்தின்மீது ஒரு கண் வைத்தே கேரளம் செயல்படுகிறது. இப்பகுதியினைக் கேரளத்துடன் இணைத்திடப் பெரிதும் முயன்றுவருகின்றனர்.

குமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பார்வையில் இருக்க வேண்டிய பத்மநாபபுரம் அரண்மனையும், கன்னியாகுமரி காந்தி நினைவகமும் கேரள அரசின்கீழ் உள்ளன. இவை தவிர இரணியல் அரண்மனையையும் கேரள அரசிடம் கடந்தகாலத் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. இதன்படி இங்குக் கேரள அரசு சுற்றுலாத்துறை மூலம் ஆளுமை பெற்றுள்ளது.

தமிழ்மக்களின் ஏழைமையைப் பயன்படுத்தித் தமிழ் மக்களைக் கூலிகளாக்கிக் கேரள முதலாளிகள் சுரண்டுகின்றனர். அண்டி(முந்திரி)த் தொழிற் சாலைகள் குமரி மாவட்டத்தில் மிகுதி. அனைத்தும் கேரளத்து முதலாளிகளால் நடத்தப்படுகின்றன. கூலிக்காரர்கள் அனைவரும் தமிழர்களே. மலைவளம் மிகுந்த கானகப் பகுதிகளில் பல நூற்றுக்

கணக்கான குறுக்கம் நிலத்தை அன்றைய கேரள அரசின் ஏவுதலால் அம் மாநிலத்தவரே கையகப்படுத்திக் கொண்டனர். அங்கெல்லாம் கூலிகள் தமிழர்களே. அப்பகுதிகளிலிருந்து கோடிக் கணக்கில் பொருள் ஈட்டுகின்றனர். அரசிற்கு வருவாய் மறுக்கப்படுகிறது. அண்மையில் துணை ஆட்சித்தலைவர் முயன்றுங்கூடக் கையேற்றம் செய்துள்ள புறம்போக்குப் பகுதியைக் கண்டறிய ஒரு தோட்டத்திற்குள் நுழைய இசைவளிக்கப்படவில்லை. உச்ச நெறி மன்றத்தினின்று தடை ஆணை பெற்றுள்ளனர். கைப்பற்றப்பட்ட அனைத்துத் தோட்டங்களின் நிலைமையும் இதுவே. தமிழக அரசு செயலிழந்து காட்சி தருகிறது.

குமரி மாவட்டம் பால்மரப் (ரப்பர்) பயிருக்கு இந்தியாவில் மிகச் சிறந்த பகுதி. மலைசார்ந்த புறம்போக்குக் கானகப் பகுதிகளைக் கையகப்படுத்தியதோடு, சிறு சிறு நிலப்பகுதிகளையும் அதிகவிலை கொடுத்து மலையாளிகள் வாங்கியுள்ளனர். பால்மரத் தோட்டங்களில் மலையாளிகளே ஆளுமை செலுத்துகின்றனர்.

மீன்வளத் துறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றின் மூலமும் மலையாளிகள் ஆளுமை செலுத்துகின்றனர்.

நடுவண் அரசுத் துறையின் மூலம் மலையாள ஆளுமை!

குமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 30% பரப்பில் பால்மரம் பயிரிடப்படுகிறது. பால்மர வாரியத் தலைமை அலுவலகம் கோட்டயத்தில் உள்ளது. குமரி மாவட்டத்தில் உள்ள பால்மர வாரிய அலுவலகங்களில் பணி புரிவோர் அனைவரும் கேரள மாநிலத்தவர்களே. அவர்கள் உரையாடுவது மலையாளத்திலேயே. ஒரு சொல்கூடத் தமிழ் பேச மாட்டார்கள். அவர்களுடைய விளம்பரங்கள், மண் ஆய்வு அறிவிப்புகள், உரமிடல் முறைகள் போன்றவற்றுக்கான விளக்கங்கள் அனைத்தும் மலையாளமே. பால் வடிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி மலையாள மொழியில்தான். ஆனால் படிப்பவர்களோ தமிழ்மக்கள். மலையாளம் படிக்காமல் தமிழ்மக்கள் பால்மரம் பயிரிட முடியாத நிலை உள்ளது. நடுவண் அரசுத் துறையின்மூலம் கேரளத்தவர்களின் ஆளுமை மிகுந்துள்ளது. குமரி மாவட்டத்தில் மலையாள மொழி ஆட்சி புரிகிறது.

இருப்புப் பாதையினைத் திருவனந்தபுரத்திற்குக் கொடுத்துவிட்டதால் மலையாள கேரளத்தவர்களின் ஆளுமையே உள்ளது.

மலைவளப் பகுதி முழுவதும் கைப்பற்றத் திட்டம்

குமரி மாவட்டத்தில் 35% நிலம் மலைப்பகுதியாகும். கேரள அரசு அகத்தியர் கான் பாதுகாப்புத் திட்டம் என்று ஒரு திட்டத்தை வகுத்துச் செயற்படுத்திவருகிறது. அதனுடன் கன்னியாகுமரிக்கு அருகேயுள்ள

மருத்துவாழ்மலை வரையிலான மலைப்பகுதி முழுவதிலும் விலங்குகளையும் மூலிகைகளையும் பாதுகாக்க நடுவண் அரசு ஏற்றெடுத்து அகத்தியர் கான் பாதுகாப்புத் திட்டத்துடன் இணைப்பதற்கான ஒரு திட்டத்தினை நடுவணரசிற்குக் கேரள அரசு அனுப்பியுள்ளது. அத்திட்டத்தினையும் நடுவணரசு ஏற்குமானால் மலைப்பகுதி முழுவதும் கேரளத்தவர் கையில் சிக்கும். தமிழர் யாரும் உள்ளே புக முடியாது. தமிழ் மக்கள் கூலிகளாகவே இருப்பர். மலையாள மொழிதான் ஆளுமை செலுத்தும். இத்திட்டம் நிறைவேறுமானால் குமரி மாவட்டத்தில் 65% இடம் மலையாளிகளின் அதிகாரத்திற்கு உட்படும். பிறபகுதிகளிலும் பலவகையில் அவர்களே ஆளுமை புரிகின்றனர்.

இனி, இங்குக் கேரளத்தவர் பெருவாரியாகக் குடியேகின்றனர். மலங்காடுகளை - புறம்போக்குகளைக் கைப்பற்றிக் குடியேறுகின்றனர். அரசுத் துறை கைப்பற்றிகளை அகற்றவில்லை. மாறாக மலையாள அதிகாரிகளால் கைப்பற்றல் ஊக்குவிக்கப்படுகிறது.

1992 ஆம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது தமிழக அரசு பொதுமக்களுக்குப் பெரிதும் ஏதம் விளைவித்தது. வெள்ளக்கட்டுப்பாட்டு நெறிமுறைகள் கைக்கொள்ளப்படாமையால் இழப்புகள் மிகுந்தன. இழப்பீடுகள் மறுக்கப்பட்டன. முதல்வரின் ஆணை என்று கூறிக்கொண்டே வேண்டுகோள்களைப் புறந்தள்ளினர். கேரளத்தில் தென்னைக்கு உரு. 50/- மேனியும் வாழைக்கு உரு. 25/- மேனியும் என இழப்பீடு வழங்கினர். இங்குக் கோடிக் கணக்கில் இழப்பு ஏற்பட்டும் பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. நடுவண் அரசு பின்னர் வழங்கிய 3 1/2 கோடி தொகையும் தேவையில்லை என்று கூறித் திருப்பி அனுப்பிவிட்டனர். இச்செயல்களை மலையாள ஏடுகளும் மலையாளிகளும் நன்கு பரப்புரை செய்தனர். கேரளத்துடன் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற கருத்தினைத் தமிழர் மனங்களில் பதியச்செய்தனர். இவ்வாறு துறைதோறும் காணப்படும் மாற்றாந்தாய் மனப்பான்மை, தமிழ்மீது வெறுப்பை மிகுத்து வருகின்றது.

கடந்த காலத்தில் செயலலிதா ஆட்சி குமரி மாவட்ட பத்மநாபபுரம் வருவாய்க் கோட்டத்தில் மலையாளமும் ஆட்சிமொழி என ஆணையிட்டது. இதனால் மலையாளமும் தெரிந்தவரே அதிகாரிகளாகப் பணியாற்ற முடியும். இதனால் பெரும்பான்மைத் தமிழர்கள் சிறுபான்மை மலையாள அதிகாரிகளுக்கு அடிமையாகின்றனர்.

தமிழ் ஒதுக்கப்படுகிறது; தமிழ் நாட்டின் மீது வெறுப்பு வளர்க்கப்படுகிறது. இதே போக்கு நீடிக்குமானால் அடுத்த நூற்றாண்டில் குமரி மாவட்டத்தைத் தமிழர்கள் இழக்க நேரிடும். குமரி பறிபோகாமல் இருக்கத் தமிழர்க்கு விழிப்பு தேவை!

திரு

- க. குழந்தைவேலன்

ஒரு மொழியையோ, ஓர் இனத்தையோ அடிமைப்படுத்தவும் வலிவிழக்கச் செய்து மீளமுடியாமல் செய்யவும் இரண்டு வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் முதலாவது ஒரு மொழி, இனத்தின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றி அவற்றின்வழித் தம் மொழி, பண்பாடுகளைப் புகுத்தி வளர்ப்பதன் வாயிலாக அடிமைப்படுத்திவிடுதல். இரண்டாவது ஒரு மொழியினத்தினரிடையே விரவிக் குடியமர்ந்து அவர்தம்முடன் இரண்டறக் கலந்து தமது மொழி, இன, மதப் பண்பாடுகளைப் புகுத்தி, புகுந்த மொழியினப் பண்பாட்டுக் கூறுகளில் பலவற்றைத் தம்முள் கரந்துகொண்டு, அதனை நீற்றுப் போகச் செய்து தமதை மேன்மையுடையதாகக் காட்டிக் கொள்வது. இவற்றுள் முதலாவது தமிழகத்திற்கு வடக்கே உள்ள வடதமிழ் நாடுகளிலும் இரண்டாவது தமிழகத்திலும் நேர்ந்துள்ளன.

தமிழகத்தில், ஆட்சி அதிகாரங்கள் வாயிலாக விசயநகரர், முகமதியர், ஆங்கிலேயர், மராட்டியர்கள்ால் ஏற்பட்ட இழப்பு வடதமிழகத்தைப் போலன்றி நம்மால் உதறியெறிந்து மீளக் கூடிய ஒன்றே. ஆட்சி அதிகாரங்கள் தோற்றவுடன் மேற்கண்ட ஆட்சியாளர்களின் தளை நம்மை விடுதலை செய்துவிட்டது. அதன் தாக்கங்களில் இருந்து நாம் விடுபட எண்ணினால் எளிதில் விடுதலை பெற்றுவிடலாம். ஆனால் ஈராயிரம் ஆண்டுகளாகச் சமயங்களின் பெயரால் நம்மிடையே வாழ்வுதேடி வந்து, நம்முடன் நம்மில் ஒருவர்போல் குடியேறி, நம் மொழி, இனப் பண்பாட்டிற்குத் தொண்டு செய்வார் போலக் கரவொடு புகுந்து, அரசர்களையும், அவர்கள்வழிக் குடிகளையும் வயப்படுத்தி, தம்மையும் தமது மொழி மதப் பண்பாடுகளையும் திணித்து, வேரூன்றி, தமது இன்றி நமது ஒன்றில்லை என்றாக்கப்பட்டுவிட்ட அடிமைத்தளையில் இருந்து மீள்தல் எளிமையான ஒன்றன்று. நாம் மீள முயலும் போதெல்லாம் முறியடிக்கப்பட்டு வருகின்றோம்; முனை மழுங்கிப் போகின்றோம்! அத்தளைகளை அறுத்துக் கொண்டு வெளியேவர முயலும் ஒவ்வொரு முயற்சியிலும் நம்முள்ளே இருந்து, தாம் இட்டுக்கட்டி நம்மிடையே ஊறிப்போன கருத்துகளை முன்வைத்து எதிர்க்குரல் எழுப்பி நம் எழுச்சியை முனை மழுங்கச் செய்து தம் பிடியிலேயே நிலைப்படுத்தி வருகின்றனர். இதனைத் தமிழக வரலாற்றை நெடுக ஆய்வார் நன்கறிவர்.

தொன்மையும், செம்மையும், தனித் தன்மையும் கொண்டு விளங்கிய தமிழ் மொழி மற்றும் தமிழினத்தின் மேல் முந்தைய மதவழிக் குடியேற்றங்கள், குடியமர்த்தங்களால் வடமொழியும் வேத மதப்

பண்பாடும், பிந்தைய ஆட்சிகளின் வழி ஆங்கிலமும் பிறவும் திணிக்கப்பட்டன. தமிழர் ஆட்சி இழப்பும், மொழி, பண்பாட்டுக் கலப்பும் தமிழகத்தின் இன - மொழித் தனித்தன்மையையும் உணர்வையும் குலைத்துவிட்டன. அதனை வென்றெடுக்கத் தோன்றிய குமுக, மொழி, அரசியல் சான்றோர்களின் பணிகள் சவளைப்பட்டுப்போன இக்குமுகத்தினரால் தொடர்ந்து முழு வீச்சோடு பின்பற்றப்படாமையால் அவர்களுடைய முயற்சிகள் முழுப்பயனை அளிக்கவில்லை. இதற்குரிய காரணங்களை வரலாற்று நோக்கில் ஆய்ந்து தெளிவுபெற்றால் அல்லது நாம் வெற்றி கொள்ளுதல் அரிது. முதற்கண் தமிழைத் தமிழ்நாட்டில் நிலைப்படுத்தும் முயற்சிகளுக்கு ஏற்படும் எதிர்ப்புகளைக்கூட நாம் சரியான காரணங்காட்டி வென்றெடுக்க இயலாமை வருந்தத்தக்கது. எடுத்துக்காட்டாகத் 'திரு' என்னும் செந்தமிழ்ச் சொல், தான் இருந்த இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளச் செய்யும் முயற்சிகளுக்கு உள்ளும் புறமும் எழும் எதிர்ப்புகளையும் அத்தகைய எதிர்ப்புகள் தோன்றுதற்கான அடித்தளங்களையும் ஆய்வதன் வழியே நம்முன் எழுப்பப்படும் எதிர்ப்புகளை முறியடித்து வெல்லும் வல்லமை பெற, வெற்றி பெற வழிமுறைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே இதனை ஒரு எடுத்துக்காட்டாக ஆய்வு செய்தல் விரும்பத் தக்கது.

திரு என்னும் செந்தமிழ்ச் சொல்லுக்கு அழகு, செல்வம், மேன்மை, உயர்வு, சிறப்பு, பொலிவு, கடவுள் தன்மை, திருமகள் போன்ற பல்வேறு பொருள்கள் தமிழில் உண்டு. இவை கழக இலக்கியம் முதலாக இன்று வரை உள்ள பல்லாயிரக் கணக்கான பாடல்களிலும், கல்வெட்டுக்களிலும் தொடர்ந்து பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஒன்றே. இந்நிலையில் கழகக் காலத்தில் வடபுலத்தில் ஏற்பட்ட சமண, புத்த மதங்கள் தெற்கு நோக்கிப் பரவத் தொடங்கின. அதனால் வடபுலச் சமண, புத்தத் துறவிகளும், அம்மதத்தினரும் தெற்கு நோக்கிப் பரவத்தொடங்கினர். அதற்கு முன்னரே சமண, புத்த மதங்கள் பெற்ற அரசச் சாய்காலினால் தம் வாழ்க்கை மற்றும் சமயக் காரணங்களுக்காக வாழ்விடந்தேடி வடமொழியாளர்களாகிய வேத மதத்தவர்களும் தென்னகம் நோக்கிக் குடிபெயரலாயினர். நாவலந்தீவின் மிக வடக்கிலும், நடுப் பகுதியிலும் இருந்து குடிபெயர்ந்தவர்களும் பெருந்திரளாகக் குடிபெயர்ந்தவர்களும் தம் குடிப்பெயர்வின் முன்னை இடம், பெயர்வின் அளவுகளைக் கொண்டு 'வடமா', 'மத்தியமா', 'பிருகத் சாரணர்' (பெருஞ்செலவினர்) என வகைப்படுத்தப்பட்டனர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வாக்கில் வடமொழியினராகிய (சமற்கிருதம்) வேதமதத்தவர்கள், வடதமிழ் மொழியினராகிய (பாகதம்

- ப்ராக்கிருதம் - வடதிராவிடம் என்பர் பாவாணர்) சமண, புத்த மதத்தவர்களை அரசச் சாய்காலினால் வீழ்ச்சியடையச் செய்து வலிமைபெற்றனர்.

மன்னரைத் தம் கொள்கைக்குள் கொண்டுவந்த வேத மதத்தவர்களை நாவலஞ் தீவிலுள்ள எல்லா அரசுகளும் அறக்கொடைகள் பலவற்றை நல்கிப் புரந்ததோடு தாமும் அம்மதத்தைத் தழுவி வேத வேள்விகளும், துலைபுகல், (துலாபாரம்) பொன் ஆவில் புகல் (இரண்ய கர்ப்பம்) பெரும் பொன் அளித்தல் (பகு சுவர்னம்) முதலிய செயல்களால் பெரும்பொருள் அளித்தனர். அவர்தம் வடமொழியையும் (முன்னர்ப் பாகத பின்னர்ச் சமற்கிருதம்) போற்றிப் புரந்தனர். இதனால் தம் வாழ்வும் தம் மதத்திற்குச் சாய்காலும் கிட்டியமையால் தமிழகத்தில் வேதமத வெள்ளம் பாயலாயிற்று. இவ் வேதமத வெள்ளத்தால் ஈர்ப்புண்ட தமிழ்ச் சமயத்தினரும் தமது தமிழ் நிலக் கடவுட்கோட்பாடுகளோடு வேதமதக் கருத்துகளையும் ஏற்றுக் கொண்டு புத்தெழுச்சியோடு கடவுள் நெறி பரப்பலாயினர்.

கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில், அதுவரை இல்லாத அளவில் கடவுள் நெறிப் பரவல் பத்தி இயக்கமாக உருவெடுத்தது. இக் காலக்கட்டத்தில் தோன்றிய செந்தமிழ்ச் செல்வர்களாகிய நாயன்மார்களும், ஆழ்வார்களும், தமிழர்களால் கடவுளாக் வணங்கப்பட்ட இயற்கைப் பொருள்களும் இடங்களுமான மாவும் மரமும் காவும் கடமும் ஆறும் மலையும் பூவும் புல்லும் பிறவும் உள்ள இடங்கள் யாவும் தம் முழுமுதற்கடவுளே குடிகொண்ட இடமாகக் கண்டு இசைத்தமிழ்ப் பாமாலை சூட்டிப் பரவினர். அதனால் அவை பெருந்தெய்வக் கோயில்களாகவே போற்றப்பட்டன. இவர்கள் காலத்திலும் அதன்பின்னரும் தமிழகத்தை ஆண்ட பல்லவ, பாண்டிய, சோழ, விசயநகர, நாயக்க மன்னர்கள் பலரும் தொடக்கத்தில் இளங் கோயில்களையும் பின்னர்ப் பெருஞ் செங்கற்றளிகளையும் கற்றளிகளையும் ஆக்கினர். காலந்தோறும் இவர்களின் திருப்பணி தொடர ஆலின் சிறுவிதை பலவேலிப் பரப்பு மரமானது போல மேற்கட்டுகள் (விமானங்கள்), மண்டபங்கள் திருச்சுற்றுகள் மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் என வளவிய கோயில்களாக்கப்பட்டன.

தமிழகத்தில் கோயில்களின் பெருக்கமும், விரிவும் மறையவர்களுக்குப் பெருவாழ்வளித்தன. மன்னர் மனத்தில் இடம் பிடித்த வடமொழி மறையவர்களே இவற்றில் பணியமர்த்தப்பட்டனர். கோயிலின் தொகைப் பெருக்கத்திற்கேற்ப, சோழ அரசர்கள் கங்கைக்கரைவரை சென்று இவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்துவந்து குடியமர்த்தினர். இவர்களுக்காகப் பல அகரங்களும்,

'பிரமதேய'ங்களும் எண்ணிறந்த 'சதுர்வேதி மங்கலங்'களும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. 'வேத விருத்தி', 'பட்ட விருத்தி' எனத் தமிழக நிலங்கள் பல காணிக்கை ஆக்கப்பட்டன. கோயில் காணியும், ஆளுமையும் பெற்ற வடமொழி மறையவர்களால் தமிழகக் கோயில்களில் ஒலித்த தமிழ் ஒலி தேய்ந்து வடமொழி ஓங்கியது. பெருங்கோயில்களின் உண்ணாழிகைகளில் வடமொழியைத் தவிரப் பிறமொழிகளால் பூசனை நடத்தக் கூடாது என்ற எழுதாச் சட்டம் நிலை பெற்றது. எந்த நாயன்மார், ஆழ்வார்களால் செந்தமிழ் நாவால் பாடல் பெற்றுப் பெருமைபெற்றனவோ, அவர்களின் பாடல்களே உண்ணாழிகைக்கு (கர்ப்பகிருகம்) வெளியில் கைகட்டி நின்றன என்றால் வேறென்ன சொல்ல!

தமிழ் நாட்டில் குடியேறி வாழ்வு பெற்ற வடமொழியாளர், தம் தொழில் ஓதலும் ஓதுவித்தலும் எனக் கொண்டமையால் பல்லவ, பாண்டிய, சோழ அரசுகள் வடமொழிக் கல்லூரிகள் பலவற்றை நிறுவி வடமொழி மறைநூற் கல்வியும், அரசியல் கல்வியும் அளித்தனர். அவர்களுக்காக மாணாக்கர் விடுதிகளும், மருத்துவச் சாலைகளும் அமைத்துப் புரந்தனர். கல்வி கேள்விகளால் கோயில்களில் தலைமைப் பொறுப்புப் பெற்றதோடு அரசவைகளிலும், பிற அலுவல்களிலும் தலைமைப் பொறுப்பில் அமர்ந்தனர். ஆனால் மிகப் பெரிய இனமான (98% மேல்) தமிழர்களுக்காக ஒரு தமிழ்வழிப் பள்ளியோ, கல்லூரியோ அமைத்ததற்கான கல்வெட்டுச் சான்று ஒன்று கூடக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழர்கள் கோயில்களில் மட்டுமன்றி அரசப் பெரும்பணிகளிலும் இரண்டாம் நிலை குடிமக்களாக்கப்பட்டனர்.

(தொடரும்)

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்

(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம்	-	300/-
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம்	-	200/-

தொடர் : 4

பாவலரேறு பொதுமையர்

- குணா

(இக் கட்டுரையின் மூன்றாந் தொடர் தென்மொழி சுவடி : 28, ஓலை : 2இல் வெளிவந்தது. அற்றைநிலையில் தமிழ்நாட்டு அரசியலில் திரு.செயலலிதாவை ஆட்சிப் பொறுப்பினின்றும் வீழ்த்தியே ஆகவேண்டும் என்னும் கட்டாயம் நேர்ந்தமையால், அதற்கான ஒருமுகப்பட்ட முயற்சிக்கு இக்கட்டுரையின் நான்காம் தொடரான இறுதிப்பகுதியின் உள்ளீடு குந்தகமாக அமைந்துவிடக் கூடாது என்னும் பொதுநல நோக்கம் கருதி அதனை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று. அப் பகுதி இவ்விதழில் இடம் பெறுகிறது.

இதழ் ஆசிரியர்

பாவாணரின் சொல்லாய்வுகளும் குமரிக்கண்டக் கோட்பாடும் தமிழின ஓர்மைக்கு உரமாயின. ஆயினும், "தென்மொழிக் கொள்கையாகிய தமிழ்நாட்டுப் பிரிவினை உலகத் தமிழ்க் கழகக் கொள்கையன்று" எனச் சொல்லிப் பாவாணர் தமிழ்த் தேசிய விடுதலையை ஏற்றாரில்லை. ஆனால், பெருஞ்சித்திரனாரோ, தாம் ஒரு தமிழக விடுதலை இயக்கத்தைத் தொடங்கவிருப்பதாக 1966 அக்டோபர் தென்மொழி இதழிலேயே வெளியிட்டவர். 1967 சூன் தென்மொழி இதழில் 'பிரிவினை நோக்கித் தள்ளப்படுகிறோம்!' என்னும் அரிய ஆசிரியவுரையை எழுதியவர் பெருஞ்சித்திரனார். அதே இதழில், கட்டம்கட்டித் "தமிழக விடுதலைப் படை! விரைவில் அமைக்கப்படும். அமைக்கவிருக்கும் இப் பேரணியில் உங்களையும் ஒரு மறவனாக்கிக் கொள்ள அணியமாயிருங்கள்!" என்னும் அறைகூவல் வெளியிட்டவர்அப் பாவலரேறு. தென்மொழியின் முதல் இதழிலேயே, "தம்மைத் தெரிவிக்குங்கால் 'தமிழன்' என்றே கூற வேண்டும். அதைச் சட்டமும் மக்களும் புறக்கணித்தால் அவர்தம்மை விட்டுத் தொலை போக வேண்டும்" எனத் தமிழருக்கு வேண்டுகோள் விடுத்ததும் அத்தென்மொழியின் தோற்றுநரே ஆவார்.

பாவேந்தர் சக்தியைப் பற்றிப் பாடியவர்; பாரத ஒற்றுமைக்காகப் பாடியவர்; பின்னர்த் திராவிடத்திற்காகப் பாடியவர். அடுத்துத் தமிழ்த் தேசியத்திற்காகப் பாடியவர். அவர் தம் காலக் கருத்தியலின் திரிவாக்கத்தை, படிநிலைவளர்ச்சியை எதிரொலித்தவர். ஆனால், பெருஞ்சித்திரனாரோ ஒரே நோக்கினர். தொடக்க முதல் இறுதி வரை தனித்தமிழ்நாடும் தமிழ்த் தேசியமுமே அவருடைய உள்ளொளியாகவும்

உயிர்க் கொள்கையாகவும் இருந்தன. ஆயினும், திராவிட வந்தேறிகளின் வேட்டைக்காடாகத் தமிழகம் சீரழிந்துவருவதை எதிர்த்துப் பாட்டால் தட்டி எழுப்பியவர் பாவேந்தர். ஆனால், ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பும் இந்தியெதிர்ப்பும் இருந்த அளவுக்குத் திராவிட வந்தேறிகளின் சுரண்டலை எதிர்த்த உள்ளக்குமுறல் பெருஞ்சித்திரனாரிடம் இல்லையென்பதும் மெய்தான்.

தனித்தமிழ்நாடு கேட்டு மாநாடுகளைக் கூட்டி மேடை கூட்டிச் சிறை புகுந்த செயல்வழிப் பெருஞ்சித்திரனாரின் வழிமுறையாக இருந்தது. தேசிய விடுதலைக்கான களமமைக்கவல்ல செப்பமான போராட்ட அமைப்பைக் கட்டியமைக்க முயலாமையைப் பொறுத்த வரையில், பெருஞ்சித்திரனார் முழுமைபெறவில்லை என்பதும் மெய்தான். தமிழகத்தில் வேலைவாய்ப்பில் தமிழருக்கே முதலிடம் கேட்டு அவர் கட்டிய அமைப்புகள் போராடாமையும் ஒரு முரணணிதான், இத்தகைய முரணணிகள் பாவலரேறுவிடம் அமைந்தமைக்கான காரணங்கள் ஆய்வுக்குரியன.

செருமானிய மெய்யிலாரான எகல் (H.W.F.Hegel, 1770-1831) ஒரு கருத்தியலார். அவர் காலப் பிரஃழிய அரசின் கொடுங்கோலாட்சிக்கு முட்டுத்தாங்கியவர் அவராவார். ஆனால், அந்த எகலே, இயங்கியல் என்னும் முறையியலை (methodology) வரலாற்றின் இடிபாடுகளிலிருந்து மீட்டு அதைச் செப்பனிட்டவர். அத்தகைய எகலின் இயங்கியல் முறையியலை அதன் அளவையியல் எல்லைகளுக்கென நீட்டினால், அஃது இறுதியில் அந்த எகலுக்கே எதிராகப் போவதை மார்க்சு சுட்டிக்காட்டினார். செருமானிய மெய்யியலின் வளர்ச்சியில் அந்த எகல் ஓர் எல்லைக்கல்லாகவும் திருப்புமுனையாகவும் அமைந்ததே அம் முரண்பாட்டிற்கான காரணம் என விளக்கினார்.

அதே போன்று, வரலாற்றை இத் துணைகண்டத்தின் தெற்கிலிருந்து தொடங்கி வடக்கே போகவேண்டும் என்னும் குமரிக்கண்டக் கொள்கையும் தமிழே முதன்மொழி என்னும் மொழி மாந்தவியத்தைத் தழுவிய சொல்லாய்வும் பாவாணர் கண்ட முறையியலாகும். அந்த முறையியலை நீட்டித்தால், அதன் அளவையியலால் பாவாணர் கொண்டிருந்த அரசியல், குமுகிய நிலைப்பாடுகள் சில அடிபட்டுப் போகும்; பாவாணரின் முறையியல் பாவாணரின் கருத்துகளுக்கு எதிராகவே திரும்பும். அதே போன்று, பெருஞ்சித்திரனாரின் முறையியல் தனித்தமிழ்நாடு என்னும் தமிழ்த் தேசிய விடுதலையாகும். அம் முறையியலை நீட்டித்தால், அதன் அளவையியல் முடிபு, அப்பாவலரேறு கொண்டிருந்த சில கருத்துகளுக்கு எதிராக நிறுத்தும்.

இத்தகைய நிலை எல்லா வரலாற்று நாயகர்களுக்கும் பொருந்தும். வரலாற்றின் புதிய திருப்பத்தைக் குறிப்பதாகவே அவை அமையும். பெருஞ்சித்திரனாரின் கருத்தியலில் காணும் முரணணிகளைத் தெளிவுபடுத்தும் விளக்கம் இதுவாகும்.

1967ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர்க் 'கசப்பான சில உண்மைகள்' என்னும் தலைப்பில் பெருஞ்சித்திரனார் இவ்வாறு எழுதினார். "முதற்கண் தி.மு.க.வின் கட்சியமைப்பே ஒரு நல்ல அரசியல் கட்சியமைப்பாக இல்லை என்பதே நம் கருத்து. அதன் கொள்கைகளும் தெளிவானவையாக இல்லை. அதன் போக்கும் அது கூறப்படும் ஒன்றிரண்டு கொள்கைளயவிலாவது ஒட்டிப்போவதாக இல்லை. அது தன் தாய்க்கட்சியிலிருந்து பிரிந்த பொழுது அதன் கொள்கை வேறு. சிறிது வளர்ந்த நிலையில் அதன் கொள்கை வேறு. இப்பொழுதுள்ள நிலையில் அதன் கொள்கை வேறு. திராவிடர் கழகத்திலிருந்து அது பிரிந்து வெளிவருகையில் அது, தன் கொள்கையில் எவ்வகையான மாற்றமும் இல்லை என்றும் அது பிரிவதற்குக் காரணம் கொள்கை வேறுபாடன்று என்றும் தலைமையின் போக்குப் பிடிக்காததே என்றும் எனவே அது தன் தாய்க்கட்சிக்குத் துணையாக நின்று (இரட்டைக் குழல் வேட்டெஃகம் போல் பணியாற்றும் என்றும் அஃது ஒரு குமுகாயச் சீர்திருத்தக் கட்சியே என்றும் தன்னைத் தமிழ் மக்கள் முன் அறிமுகப்படுத்திக் கொண்டது அக் கொள்கையில் அணுவளவும் இக்கால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதன் பின் அது தன்னை ஓர் அரசியல் கட்சியென்று வெளிப்படையாகக் கூறியதுடன் அமையாது, அதன் அடிப்படையான நாட்டுப் பிரிவினையையும் கைவிடப்பட்டதாக வேறு அறிவித்தது. இக்காலோ பேராயக் கட்சியை வீழ்த்துவதே தன் நோக்கமென்றும் எப்பாடு பட்டாகிலும் எவ்வளவு வளைந்தும் நெளிந்தும் கொடுத்தாகிலும் தான் அரசுக்கட்டிலில் அமர்வதே தன் கட்சியின் இலக்கு என்றும் கூறிக்கொள்கின்றது. வெளிப்படையாக நோக்குவார்க்கும் அதன் இக்கால ஆரவாரப் பேச்சுகளில் மயங்குவார்க்கும் உள்ளீடற்ற அதன் உட்கோள் புலப்படாதாகையால், அதுபற்றி நாம் கூறும் உண்மை அவர்க்குக் கசப்பாயிருப்பதில் வியப்பில்லை.

"இனித் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடும் பாவாணர், அப்பாத்துரையார், இலக்குவனார் போன்ற புலவர்க்குப் பிற கட்சிகளும் ஆளுங்கட்சியும் எவ்வாறு துணைநிற்கவில்லையோ, அவ்வாறே 'தி.மு.க.வும் துணை' நில்லாததுடன், கட்டாயம் வெளிவர வேண்டிய வரலாற்று நூல்கள், மொழி நூல்கள், அகரமுதலிகள் முதலிய வெளியீடுகளிலும் துளியும் அது கவலைப்படவில்லை. எனவே மொழி வளர்ச்சியிலும் தி.மு.க. தன் அடிப்படையான எண்ணத்தைச்

செயல்படுத்தவில்லை. கலைஞர் பேசுவதே தமிழ் என்றும், அறிஞர் உரைப்பதே மொழி என்றும், நாவலர் உரைப்பதே இலக்கியம் என்றும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள நாம் முனைந்துவிடக்கூடாது. (இவர்கள் இவ்வாறு கருதுவார்களானால் ஆதித்தனார் 'தினத்தந்தி' எழுதுவதே தமிழ் என்றும், 'ஆனந்தவிகடனார்' தாம் எழுதுவதே தமிழ் என்றும், இராசாசி தம் கல்கியில் வருவதே தமிழ் என்றும் கூறிப் பெருமையுறுவதில் வியப்பில்லை. அக்கால் மறைமலையடிகளார்க்கும் வையாபுரிக்கும் வேறுபாடுகளே இரா.) இந்தி எதிர்ப்பில் உயிர் நீத்தவர்களைத் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வதை விடுத்துத் தங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதிலும் (அதுவும் சிறிதளவே உண்மை) சிறுமையே புலப்படுகின்றது. வளர்ந்துவரும் இளைஞர் குமுகாயத்தின் ஆணிவேரில் போலித் தமிழ் உணர்வின் வெற்றாரவாரங்களை நீராகப் பாய்ச்சிவிடுவதே நம் மொழி வளர்ப்பாக இருக்கக்கூடாது. இத்தகைய புல்லிய நினைவுகளால்தாம் நம் தமிழர் உணர்வு இன்னும் ஒளி மணிபோல் காழ்க்கவில்லை..........

"இனி 'இக் கட்சி தனக்காக வகுத்துக்கொண்ட அரசியல் கொள்கைகளாகிலும் வலிவு பொருந்தியனவாக இருக்கின்றனவாவெனில், அதுவும் வருந்துதற்குரியதே! பேராயக் கட்சியை எதிர்த்து மாநில அளவில் நாம் வெற்றி பெறுவது பேராயக் கட்சிக்கு வேண்டுமானால் தீங்காக இருக்குமேயன்றித் தமிழகத்திற்கு அதனால் எள்ளளவும் நன்மை ஏற்படப் போவதில்லை. மாநில அரசை நாம் கைப்பற்றிவிடுவதாலேயே இந்தி நுழைப்பைத் தடுத்துவிடவும் முடியாது. கேரள மாநிலமே இதற்குச் சான்றாகும். எதிர்க்கட்சிகளின் கைவலுத்த அந் நிலத்திலும் இந்தியின் கை ஓங்கித்தான் உள்ளது. அங்கு இந்தியா முழுமைக்கும் அமைக்கப்பெற்றிருக்கும் ஓர் அமைப்பை நம் மாநில அளவில் முரித்துவிடுவோம் என்று பறைசாற்றுவது உண்மையானதாகவும் நடைமுறைக்கு ஒத்ததாகவும் இல்லை.

"இவ்வாறு குமுகவியல், மொழியியல், அரசியல், பொருளியல் ஆகிய நான்கு துறைகளிலும் நமக்கு நம்பிக்கையூட்டக்கூடிய கட்சியாக தி.மு.க. அமையவில்லை. போதிய அடிப்படைகளை அமைத்துக் கொள்ளாத நிலையில், நம் மாநில அமைப்பில் அரசோச்ச விரும்புவதும், வடநாட்டானின் முரட்டுப் போக்கினைத் தளர்த்த விரும்புவதும் அதனால் நமக்கு உட்பகையாக உள்ள பார்ப்பனரின் கைக்கு வலிவேற்றுவதும் நாம் மதிக்கத்தக்கனவாக இல்லை.

"இனி, ஓர் அரசின் ஆளுமைக் கொள்கை (Administrative Theory) யால் ஏற்படும் தொல்லைகள் வேறு. அரசியல் கொள்கை (Political Theory)யால் ஏற்படும் இடர்ப்பாடுகள் வேறு. ஆளுமைக் கொள்கை அரசியல் கொள்கையைச் செயல்படுத்த ஓர் அரசு வழிப்பற்றும்

கொள்கையாகும். அரசியல் கொள்கையென்பது ஓர் அரசு தனக்காக அமைத்துக் கொண்ட அமைப்புக் கொள்கையாகும். நாம் பேராயக் கட்சியைக் கடிவது அதன் அரசியல் கொள்கையைப் பற்றியே. தி.மு.க. வும் பிறவும் குற்றஞ்சாட்டுவது அதன் ஆளுமைக் கொள்கை பற்றியே. பேராயக் கட்சி மாநிலங்களைத் தன் அதிகாரத்திற்குக் கட்டுப்படுத்தி இணைந்திருப்பதும், அவ்வாறு இணைந்த இணைப்பை ஒருமைப்பாடு என்னும் போலிப் பேச்சாலும் ஆட்சிமொழி என்ற ஒருசார்புக் கொள்கையாலும் வலுப்பெறச் செய்வதும் அந்நிலைகளைத் தட்டிக் கேட்பின் தன் அதிகார வெற்றியால் மக்கள் உரிமைக் கட்டுப்படுத்துவதும் நாம் கண்டிக்கத்தக்கனவாகும். அவ்வாறு கண்டித்தும் அரசு தன் அரசியற் கொள்கையைத் திருத்திக் கொள்ளாமற் போமாயின், இவ்விந்தியக் கூட்டாட்சியினின்று விடுபடுவதும் தனித்தமிழ்நாடு அமைப்பதுமே தமிழர்களாகிய நமக்கு இருக்க வேண்டிய அரசியற் கொள்கையாகும்.

"இன அளவில் ஓரினம் பிறிதோர் இனத்தை அடக்கியாளும், அல்லது ஏமாற்றி வாழும் கீழ்நிலைக்கு அரசு இடம் வைக்கக்கூடாது. மாறாக, ஒழித்துக் கட்டுதலும் வேண்டும். இத்தகைய நிலைக்கு, நடுவணரசு ஒத்துவராவிடில் தமிழகத்தைப் பிரிப்பதற்கே முயற்சி செய்ய வேண்டுமேயல்லாமல் கொள்கை மாறும் கூட்டாளிகளுடன் மாநில அளவில் அரசமைப்பது அந் நடுவணரசுக் கொள்கைக்கே துணை நிற்பதுடன், பார்ப்பனரின் சூழ்ச்சிகளுக்கும் நம்மைச் சிக்கக் கொடுப்பதும் ஆகும் என்பதை நாம் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். எந்நிலையிலும் நம் மொழிக்கும் பண்பாட்டுக்கும் வாழ்விற்கும் தவறுநினைக்கும் ஓர் அரசினின்று நாம் விடுபடவே நினைக்கின்றோம். அரை மனமாகவும் குறைமனமாகவும் அச்சத்தோடும் இணைந்திருப்பதைவிடப் பிரிந்து போவதே நல்லது. அந்த அளவில் தமிழக விடுதலையை திரு. அண்ணாத்துரை அவர்கள் அறிவிப்பார்களானால் நாமும் நம்மைச் சார்ந்த தமிழரும் அவருடன் 'தோளொடு தோள் கொடுத்துத் துணையாக நிற்போம்' என்று உறுதியாகக் கூறுகின்றோம். அந் நிலை தவிர்ந்த வேறு எந்நிலையிலும் சில பல காரணங்களுக்காக இப்பொழுது இருக்கின்ற நிலையே இன்னும் சிறிது காலத்திற்கு வரவேற்கப்படுவதில் தவறில்லை.

"இப்பொழுதுள்ள அமைப்பிலேயே நாம் நமக்கு வேண்டிய குமுகாய விழிப்பையும், நம் இன உயர்வையும் பெற வாய்ப்பிருந்தும் அக்காரணங்களில் ஒன்றாகும். இந்த வாய்ப்புகளை நாம் பார்ப்பனர் வழி இணைந்து பெற்றுவிடுவோம் என்பது குதிரைக் கொம்பே! இப்படிச் சொல்வதால் நாம் பேராயக் கட்சிக்குத் துணைபோவதாக எவராவது கருதுவாரானால் அஃது அவர்களின் அறியாமை

ஆகுமேயன்றி நம் கொள்கைச் சறுக்கல் ஆகாது என்று தெளிய வேண்டுகின்றோம்."

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பாவலரேறு வெளிப்படுத்திய இக் கருத்துகள் இன்று அப்படியே மெய்ப்பட்டுவிட்டன. இந் நிலையில், பெருஞ்சித்திரனாரின் அலசல், வருவன முன்னுரைப்பதாக அமைந்திட்டது. இந் நிலைப்பாடு, அவர் ஆக்கிய தனித்தமிழ்நாடு என்னும் செவ்விய முறையியல் வழிநிற்பது.

ஆனால், அடுத்து அவ்வப்போது தி.மு.க.விற்குத் துணைநிற்கத் தொடங்கிய பெருஞ்சித்திரனாரின் நிலைப்பாடு, அதனின்று பிறழ்ந்த எதிர்மறையாகியது. அதைக் கண்டு அலறிப் புலம்பிய தமிழர் பலர். அவர்களில் ஒருவர். 'உங்கள் மேல் ஒரு குற்றச்சாட்டு !' என்னும் மடலை விடுத்தார். அது தென்மொழியில் வெளிவந்தது. அம் மடலில்,

"உங்களை நீங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். இது மிகக் கொடிய நிலை. கருணாநிதிக்குப் புகழ்பாடும் தென்மொழிப்பக்கங்களில் முடை நாற்றம் வீசுகிறது. எதிரிகளின் முன் எங்களைத் தலைகுனிய வைக்காதீர்கள்! நீண்ட நெடுங்காலத் தமிழகத்து வரலாற்றின் ஒரு காலக்கட்டத்தில் எதிர்பாராமல் கிடைத்த பெருங்கருவூலமாகிய ஓர் ஒப்பரும் பேரறிஞனையே ஒரு விளம்பரப் பலகையாய்ப் பயன்படுத்தும் கொலைஞர்களுக்கு விளம்பரம் தேடுவதிலேயே உங்களின் வாழ்நாளை வீணாக்காதீர்கள்! உங்கள் விடுதலை வேட்கைகள் கருணாநிதியின் மாநிலத் தன்(அடிமை) ஆட்சிக் கொள்கைக்கே எருவாகிக் கொண்டிருக்கின்றன."

- என்னும் அந்த உள்ளக்குமுறல் அம் மடல் வெளியிடப்பட்ட 1974ஆம் ஆண்டு சூழலுக்கு மட்டுமின்றி, பெருஞ்சித்திரனாரின் இறுதி நாட்கள் வரை பொருந்தும். இதுவே பெருஞ்சித்திரனாரின் முறையியல், அவரது அரசியல் நிலைப்பாடுகளோடு முரணி நிற்கும் கோலமாகும்.

பெருஞ்சித்திரனார் என்னும் தமிழிய இயற்பாட்டின் பொதுமை ஓர்மையைப்பற்றி ஆராயத் தலைப்பட்ட நான், அதனின்று சற்று விலகித் திரிந்திருக்கலாம். மீண்டும் அந்நிலைக்குத் திரும்புகையில், ஒரு தமிழ்த் தேசிய விடுதலைப் போராளியின் பொதுமை நேயம் மட்டும் கள்ளமற்றது என்பதைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

தமிழகப் பொதுவுடைமையரில் ஓரிரு கூறினரே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு இணங்கிவந்துள்ளனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழுக்கும் தமிழினத்திற்கும் தமிழ்த் தேசியத்திற்கும் எதிராக ஆரியப் பார்ப்பனியத்திற்கும் இந்தி-இந்து வல்லரசுக்கும் தொண்டரடிப் பொடியராகிய ஐந்தாம் படையாகவே தொடர்ந்து இயங்கிவருகின்றனர்.

"சோற்றாலடித்த பிண்டங்களாய், எடுபிடிகளாய், ஏனோதானோக்களாய்" இருந்துவரும் இவர்களையும் மெல்லத் தமிழ்த் தேசியத்தின்பால் வென்றெடுக்கலாமே எனச் சிலர் கருதலாம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இவர்களைத் திருத்த முயல்வது விழலுக்கு நீர் பாய்ச்சுவதைப் போன்றது. இதனால், இவர்கள் தமிழ்த் தேசிய அணியில் பகையணியில்தான் வைக்கப்பட வேண்டியவர்கள். இதில் ஐயமில்லை.

பெருஞ்சித்திரனாரின் பொதுமை நேயம் மண்ணுக்குப் பொருந்தியது என்பது மட்டுமின்றி, அதில் இருமை நிலை இல்லை. பகலிலே தொழிலாளருடன், முன்னிரவிலே முதலாளியருடன் என்னும் போலிமை அவருடைய பொதுமை உளப்பாட்டில் இல்லை. பெருஞ்சித்திரனார், பொதுமை நேயத்தில் ஊன்றிய தமிழ்த் தேசிய விடுதலைப் போராளி; இதனால், அவர் ஒரு தனி வரலாறு. அவரே ஒரு தனிப் பல்கலைக்கழகம். தமிழக விடுதலை இயக்கத்தின் முதல் எழுத்தும் முதல் பாடமும் அவரேதான்.

பெருஞ்சித்திரனார் தமிழ்த்தேசிய விடுதலைக் கொள்கையின் தலையூற்றுத்தான். ஆனால், அத் தேசிய விடுதலையை எய்த அவர் கடைப்பிடித்த அமைப்பியல் வடிவமும் வினைப்பாடும் செயல்வரம்பும் அவருக்குக் கைகொடுக்கவில்லை. இதை இனமானம் கொண்ட தமிழிளைஞர்கள் உன்னிப் பார்க்க வேண்டும். உருப்படா 'கழக'த்தின் மேடைப்பேச்சு அரசியலைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, விடுதலைப் போராட்ட அரசியலை முன்னுக்குக் கொணர வேண்டும். இதுவே பெருஞ்சித்திரனார் காட்டிய வழியின் தொடர்ச்சியும் முரணணியும் ஆகும். காலத்தின் தேவை இது.

பாவலரேறு ஐயா அவர்களின்
திருக்குறள் மெய்ப்பொருளுரை

நம் அரும் பெறல் ஐயா பாவலரேறு அவர்கள் தம் வாழ்நாள் பின்பகுதியின் பெருமுயற்சியாய் எடுத்துக் கொண்டு எழுதிய திருக்குறள் - மெய்ப்பொருளுரை - (ஐயா அவர்கள் எழுதி முடித்துள்ள வரையில்) வரும் 10-3-97 அன்று வெளியிடப் பெறுகிற வகையில் அணியமாகிக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் பக்கங்களுக்கும் மேலான அந்நூல் வெளியீட்டின் பெருமுயற்சிக்கு அன்பர்களின் துணையே பெரிதும் எண்ணப் பெறுகிறது.

- ஆசிரியர், 'தென்மொழி'

ஏற்றம் காண்போம்!

--- முனைவர் கடவூர் மணிமாறன். ---

என்னஐயா! நலமாக இருக்கின் றீரா?
  எனக்கேட்பின் ஏதோஇருக் கின்றேன் என்பார்!
சொன்னாலும் சரியாகப் புரிந்து கொள்ளார்!
  'சும்மாதான்' என்றெதற்கும் விடையைச் சொல்வார்!
என்னால்தான் இங்கெதுவும் நடக்கும் என்பார்!
  ஏறவிட்டே ஏணியினை எடுத்துச் செல்வார்!
தன்னலத்தால் பொதுநலத்தைத் தள்ளி வைப்பார்!
  தழைத்துவரும் உயர்வுக்கே கொள்ளி வைப்பார்!

காற்றுக்குக் கைம்மாறு யாது செய்தோம்?
  கடல்வானம் மழைமேகம் அருவி, பாயும்
ஆற்றுக்கும் சலசலக்கும் ஓடை, பொய்கை
  அசைந்தாடும் தென்றலுக்கும் மலைக ளுக்கும்
ஊற்றுக்கும் நாமென்ன உதவி செய்தோம்?
  ஒளியுமிழும் நிலவுக்கும் கதிரோ னுக்கும்
சேற்றுக்குள் சிரிக்கின்ற மலர்க ளுக்கும்
  சீர்மிகுந்த பங்களிப்பாய் எதனைச் செய்தோம்?

நோக்கத்தை நன்குணர்ந்து வெற்றி கண்டு
  நூறுவகைப் பயன்களினால் பெருமை சேர்க்கும்
ஆக்கத்தை விளைக்காமல் சான்றோர் போற்றும்
  அருஞ்செயல்கள் ஆற்றாமல் எந்நே ரத்தும்
தூக்கத்தைக் கொண்டிருந்தால் நம்மை விட்டுத்
  தொலைவினிலே ஓடாதா நன்மை யாவும்?
ஏக்கந்தான் நமையணைக்கும்! இருளே நம்மை
  எதிரியெனச் சூழ்ந்திருக்கும்; இடர்கள் தாக்கும்!

கனிகொடுக்க மறுக்கின்ற மரங்கள் உண்டா?
  கண்திறந்து பார்க்காத உயிர்கள் உண்டா?
பனியில்லாச் சிலைமாதம் உண்டா? ஊரில்
  பயன்படுத்தா ஊருணியும் சிறப்ப துண்டா?
தனிமையிலாத் துறவுண்டா? சுரக்கும் அன்பால்
  தழுவாமல் சுற்றங்கள் உறவும் உண்டா?
இனியென்ன? நாடு, மொழி இனத்தை எண்ணி
  இழிவுகளைத் துடைத்தெறிவோம்! ஏற்றம் காண்போம்!

மக்களவை

சிந்தனைக் குழப்பத்திற்கு முடிவு

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

திரு. மார்க்சு அவர்களின், 'தமிழ்கள்' என்ற கருத்து சிந்தனையைத் தூண்டுவதுதான். ஆனால் மிக மேம்போக்கானது.

கழக நூல் தொகுப்பே தமிழகத்தின் பெரும்பான்மை மக்களை ஒதுக்கிவிட்டு அன்று ஆளுமை பெற்றிருந்த ஒரு சிறு குழுவினரின் பண்பாட்டை மட்டும் காட்டும் பாடல் தொகுதியாகும். அத் தொகுப்பினால் தமிழகத்தின் பண்டை வரலாறு மறைக்கப்பட்டதாலேயே தமிழகத்தின் வரலாற்றைக் கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் இலக்கியங்களிலிருந்து பெற முடியவில்லை. ஆனால், தமிழகத்துக்கு வெளியே நிறையச் சான்றுகள் உள்ளன.

பெரும்பான்மை மக்களை ஒதுக்குவதற்கு உதவியது

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான

என்ற தொல்காப்பிய வாய்ப்பாடு.

ஆனால், ஒதுக்கப்பட்ட தமிழ் என்றும் ஒதுக்கப்பட்டு நிற்கவில்லை. 'உயர்ந்தோருக்குத் தங்களை யொத்த பிறரிடமிருந்து (உள்ளே அல்லது வெளியிலிருந்து) விளிப்புரைகள் வந்த போதெல்லாம் தாமே நலிவுறச் செய்த தங்கள் 'செந்தமிழை', 'ஒதுக்கப்பட்ட தமிழின்' துணை கொண்டு உயிர்ப்பித்துக்கொண்டனர். அந்த மக்களையும் அப்போதைக்கு ஏற்றுக் கொண்டனர். அடுத்து மீண்டும் ஒரு முறை உயர்ந்தோர் கீழோர் தத்தமக்குரிய இடத்துக்குச் சென்றனர். இந் நிகழ்ச்சிகளில் மேலேயிருந்த சிலர் கீழாகவும் கீழே இருந்த சிலர் மேலாகவும் மாறியுள்ளனர். சிவனிய எழுச்சிக்காலம், மாலிய எழுச்சிக்காலம், பெரிய புராணக் காலம், பள்ளு, குறவஞ்சிக்காலம் ஆகியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

இந்த நூற்றாண்டில் தனித்தமிழுக்கு உணர்வூட்டியவர் பரிதிமாற் கலைஞர்; செயலாற்றியவர் மறைமலையடிகள்; பரப்பியவர் பாவாணர். ஆனால் மறைமலையடிகளின் தனித்தமிழுக்கும் பாவாணரின் தனித்தமிழுக்கும் ஒரு வேறுபாடுண்டு. மறைமலையடிகள் இலக்கியங்களிலிருந்து சொற்களை எடுத்தாண்டார். பாவாணர் தம்

சொல்லியல் ஆய்வுகளிலும் நூல்களிலும் நாட்டுப்புறத்துப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடம் வழங்கிய சொற்களை ஏராளமாக எடுத்துப் பயன்படுத்தினார். ஆனால் அதனை, அதாவது நாட்டுப்புற மக்களிடையில் தூய தமிழ்ச் சொற்கள் வழங்குகின்றன என்பதை வெளிப்படக் கூறவில்லை. ஆனால் தம் இறுதிக் காலத்தில் தம்மால் தொகுக்கப்பட்ட **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி** முதன் மடலத்தில் தமிழில் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்களை நாட்டுப்புறத்து ஒதுக்கப்பட்ட மக்களிடம் வழங்கும் பழந்தமிழ்ச் சொற்களின் துணைகொண்டு அகற்றி விட முடியும் என்ற கால்டுவெலாரின் கூற்றை மேற்கொண்டு மறைமுகமாகக் கூறினார்.

'தனித்தமிழ் என்பது பண்டிதர்களின் தமிழ்' என்று தனித்தமிழின் பெயரால் நடத்தப்படும் சில அமைப்புகளின் மேடையில் 'முற்போக்கர்கள்' சிலர் கூறியதை எதிர்த்து எம் போன்றோர் நாட்டுப்புற மக்களிடமிருந்துதான் பாவாணர் பல சொற்களைத் தம் படைப்புகளில் பயன்படுத்தியிருக்கிறார் என்று கூறியபோது அமைப்பை நடத்துகிறவர்களே அதை ஆதரிக்கவில்லை. நாட்டுப்புறத்திலே வளர்ந்து அங்குள்ள ஒதுக்கப்பட்ட மக்களில் ஒருவராய் வளர்ந்த பாவாணருக்கு அத்தகைய ஒரு குமுகியல் பார்வை வாய்க்காததால்தான் திரு. மார்க்சு போன்றவர்கள் குழம்ப வேண்டியுள்ளது.

மோள் என்ற சொல் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வையாபுரியாரைக் கொண்டு வெளியிட்ட அகரமுதலியில் இடம் பெறவில்லையென்று குரல் கொடுத்தவர் பாவாணர். ஆனால் இன்றும் மோள், சிரை (இச்சொல் இதே பொருளியல் செரான் என்ற வடிவில் செருமன் மொழியில் இருப்பதாக ஆங்கில அகரமுதலி கூறுகிறது) போன்ற பல சொற்கள் இலக்கியங்களில் பயிலப்படுவதில்லை. மாறாகச் சிறுநீர், மழித்தல் போன்ற சொற்கள் வழங்கப்படுகின்றன.

நாட்டுப்புற மக்களிடம் அதாவது ஒதுக்கப்பட்ட மக்களிடம் பழந்தமிழ்ச் சொற்கள் மறைந்து கிடக்கின்றன என்ற உண்மை தெரியாததால்தான் தனித்தமிழ் இயக்கத்தாரும் நேர்மையான முற்போக்குக் கருத்தினரும் இக்களத்தில் இடைவிடாது மோத வேண்டியுள்ளது. போலி முற்போக்கினர் இதனைத் தமிழ் எதிர்ப்பு இயக்கமாகவே பயன்படுத்திக் கொள்கின்றனர்.

கடந்த காலத்தில், குமுகியலில் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு உலகத் தொடர்புகள் இல்லை. இன்று அவர்கள் மூலை முடுக்குகளில் முடங்கிக் கிடந்தாலும் திரைப்படமும் மின்னணுவியற் பொதுத் தொடர்புக் கருவிகளும் அவர்களைத் தேடிச்சென்று தொடுகின்றன. அவற்றின் பரப்புதல் வலிமையால் ஆயிரமாயிரமாண்டுகளாய் அவர்களிடம் பாதுகாப்பாக இருந்த பழந்தமிழ்ச் சொற்செல்வம் இன்று கிட்டத்தட்ட

பறிக்கப்பட்டுவிட்டது. இன்றைய கல்வி முறையில் எழுத்தறிவு பெற்றவர்களிடமிருந்து நமது பாடத்திட்டமே அப் பழஞ்சொற் செல்வத்தைப் பறித்தெடுத்துவிட்டது. இந்நிலையில் இப் பெருஞ்செல்வத்தைப் பேணிப்பாதுகாப்போர் வட்டார வழக்குச் சொற்களைக் கையாண்டு இலக்கியப் படைப்புகளைப் படைப்போரே. அவர்களின் பணி ஊக்குவிக்கப்பட வேண்டும்; போற்றப்பட வேண்டும். திரு. கி. இராசநாராயணன் போன்று வட்டார வழக்குத் தொகுப்போர் பாராட்டப்பட வேண்டும்.

'தாராமதி' இதழில் நடைபெற்ற ஒரு கருத்தாடலில் வட்டார வழக்குச் சொற்களைத் தம் படைப்புகளில் மிகுதியாகக் கையாண்டுள்ள தோப்பில் முகமது மீரான் வட்டார வழக்குச் சொற்களிலுள்ள திருத்தமின்மையை அகற்றி அவற்றைப் பொது வழக்குக்குக் கொண்டு வர வேண்டுமென்ற கருத்தை வரவேற்றிருக்கிறார்.

தமிழகத்தில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாய் திருமார்க்சு சுட்டிக்காட்டிய பன்மைப் பண்பாடு நம் வலிமையை அழித்து அதனால் மீண்டும் மீண்டும் நாம் அயலவருக்கு அடிமைப்பட்டுள்ளோம். அந்த அடிமைத் தனத்தை அகற்றுவதற்கான உணர்வைக் கொண்டுள்ள ஆர்வலர்கள் முன் இந்தப் பன்மையை முதனிலைப் படுத்துவதால்தான் திரு. மார்க்சு அந்த அடிமைத்தனத்துக்கு ஆதரவாளர் போல் தோன்றுகிறார்.

ஆனால் இந்தியாவிலுள்ள மொழிப் பன்மையோடு தமிழ்மொழியின் உள்ளேயுள்ள பன்மையை அவர் ஒப்பிடும் போதுதான் நமக்கு ஐயமேற்படுகிறது, இது தெளிவின்மையின் விளைவா அல்லது தெரிந்தே செய்யப்படுகிறதா என்று. இந்தியாவிலுள்ள மொழிப் பன்மை, வெவ்வேறு நிலப் பகுதிகளில் வழங்கும் வெவ்வேறு மொழிகள். ஆனால் தமிழைப் பொறுத்த வரையில் அது ஒரு நில எல்லைக்குள் அதன் முழுப் பரப்பிலும் ஏறக்குறைய சம அளவில் கலந்து வாழும் வாழ்நிலை, குமுகியல் அடுக்குகளில் வேறுபட்ட மக்களிடையிலும் வெவ்வேறு வட்டார மக்களிடையிலும் நிலவுகின்ற, ஆனால் அதே வேளையில் ஒருவர் மொழியை இன்னொருவர் புரிந்து கொள்ளும் எல்லையைத் தாண்டாத 'பன்மை' தான். பதினெட்டுத் திசை வழக்குகளையுடைய இந்தியின் பன்மை போன்றதன்று தமிழின் 'பன்மை'. உலகிலுள்ள பெரும்பான்மை மொழிகளுக்கும் உரியதுதான். அத்துடன் திருமார்க்சு அவர்கள், அவர் கூறும் 'தமிழ்கள்' வாயிலாக வெளிப்படும் மக்களின் 'பன்மை' அவ்வாறே நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறாரா அல்லது அவை அகற்றப்பட்டு அம் மக்கள் ஒருமையை நோக்கி நகரவேண்டும் என்று நினைக்கிறாரா? அவர் கூறியுள்ள முறையைப் பார்த்தால் இந்தப் பன்மை நிலையானது என்று கருதுகிறார் என்றே தோன்றுகிறது.

இல்லையெனில் அப் பன்மையை ஒருமையாக்க வேண்டும் என்ற அவா எங்காவது மறைமுகமாகவாவது ஒலித்திருக்கும். தமிழகத்தில் சாதியை ஒழிக்க முடியாது, எனவே சாதியாகப் பிரிந்திருப்பதுதான் தமிழனின் தலையெழுத்து என்று கூறும் திரு. கருணாமனோகரனைப் போல், வல்லரசியத்தின் முன் தேசிய முதலாளியம் வளர முடியாது. எனவே என்றும் வல்லரசியத்தின் அடிமைகளாக இருப்பதுதான் இந்தியா போன்ற ஏழை நாடுகளின் தலையெழுத்து என்று கூறும் திருஞானியைப் போல் சாதியாலும், சமயத்தாலும் தாய்மொழிகளாலும் மட்டுமன்றித் தமிழகத்தில் வெவ்வேறு வகுப்பு மக்களும் வட்டார மக்களும் பேசும் தமிழ்மொழியாலுங்கூடப் பன்மைப்பட்டு விட்ட தமிழக மக்கள் என்றும் அவ்வாறு பிரிந்து நின்று மோதிக் கொள்வதே அவர்களது தலையெழுத்து என்றும் எல்லோர் மண்டையிலும் அடித்துத் திணிக்கப் பார்க்கிறார் திரு. மார்க்சு. ஆனால் இவர்களுடைய முயற்சி அல்லது அவா நிறைவேறாது.

மக்களை ஒன்றுபடுத்துவது 'இன' அடையாளமன்று; இனம் எனும் கருத்துரு கடவுள் போல், காதல் போல் இன்று வரையறைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக ஆகிவிட்டது. தமிழினம் என்பதும் அவ்வாறே. அது போல் தேசியம் என்பதற்குப் பெரும்பான்மை மக்களின் மொழி (அதன் 'பன்மை'த் தன்மைகளுடன்) ஓர் அடையாளமே. உண்மையில் நிலந்தான் அடிப்படை. நிலமும் பொழுதும் (காலநிலையும்) தான் முதற்பொருள் என்பது தமிழர் மெய்யியல் மட்டுமன்று, மார்க்சிய இயங்கியலுமாகும். எனவே நிலமும் அதன் அடிப்படையில் அந்நிலத்தில் வாழும் மக்களுக்குரியதாகிய அதன் செல்வங்களும் அவற்றுக்காக அவர்கள் நடத்தும் உரிமைப் போருந்தான் ஒரு நிலமக்களை ஒருமைப்படுத்த முடியும்.

தமிழ்த் தேசியச் சிக்கல் எனப்படும் தமிழகத் தேசியச் சிக்கல் தமிழகத்தின் வளங்களின் மீது (நிலவளம், பொருள்வளம், மக்கள் வளம்) தமிழக மக்களுக்குள்ள தடையற்ற உரிமைச் சிக்கலேயாகும். இந்த உரிமைகளைப் பெற நாம் மேற்கொள்ளும் போராட்டமே தமிழ்மொழிப் பன்மையை மட்டுமன்று; தமிழகத்திலுள்ள பிறமொழிப் பன்மையையும் சாதி, சமயப் பன்மைகளையும் மக்களிடமிருந்து அகற்றி அவர்களை ஒருமையை நோக்கி இட்டுச் செல்லும். இந்தத் தெளிவுதான் திருமார்க்சு போன்றோரின் சிந்தனைக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவரும், அவர் அந்த ஒருமையை விரும்புபவராயின்.

- **குமரி மைந்தன், பாளையங்கோட்டை**

'தமிழ்கள்' - மறு விளக்கம்

கடந்த 'தென்மொழி' (சுவடி : 28 ஓலை : 11) மக்களவையில் பேராசிரியர் அ.மார்க்சு அவர்கள் 'தமிழ்கள்' குறித்துக் கூறியிருந்த

விளக்கத்தைப் பார்த்தேன். அது பற்றிய என் கருத்துரையைத் 'தென்மொழி' வாயிலாகவே வெளியிட விரும்புகிறேன்.

சுவிட்சர்லாந்து நாட்டினர் நான்கு மொழிகள் பேசுகின்றனர், நாகர்கள் பதினாறு மொழிகள் பேசுகின்றனர் என்றும் அவர்கள் அரசியல் நோக்கில், உணர்வு அடிப்படையில் ஒரே இனத்தவராகவே அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் பேராசிரியர் மார்க்சு கூறுகிறார். நான்கு வெவ்வேறு மொழிகள் பேசும் சுவிட்சர்லாந்து மக்கள் எந்த ஒரே இனத்தவராக அடையாளம் காணப்படுகின்றனர் என்பதைப் பேராசிரியர் தெளிவுபடுத்தவில்லை. ஒருவேளை அந்த நான்கு மொழிகள் பேசும் மக்களும் அவர்கள் வாழும் நாட்டின் பெயரால் 'சுவிட்சர்லாந்து இனம்' என அடையாளம் காணப்படுகின்றனரோ? அப்படிக் காணப்பட்டால், வெவ்வேறு மொழிகள் பேசும் இனங்கள் வாழும் இந்தியாவில்கூட நாட்டின் பெயராலேயே 'இந்தியர்' இனம் என்று சொல்லலாமே! ஏற்றுக் கொள்கிறாரா பேராசிரியர் அவர்கள்!

சென்னையில் பேசினாலும் மதுரையில் பேசினாலும் தஞ்சையில் பேசினாலும் திருநெல்வேலியில் பேசினாலும் கன்னியாகுமரியில் பேசினாலும் தமிழ் என்பது ஒன்றுதான் - அதுவே மூலம். ஆனால் வட்டாரத் தன்மைகளுக்கு ஏற்ப அதன் ஒலிவடிவில் சிறிது வேறுபாடும் சொற்களில் திரிபும் ஏற்படும். எடுத்துக் காட்டாக சென்னையில் 'வாயப்பயம்', மதுரையில் 'வாழப்பழம்' தஞ்சையில் - நெல்லையில் - குமரியில் 'வாழைப்பழம்'. இந்தச் சொல்திரிபு அல்லது சிதைவுகளும் ஒலி மாறுபாடும் இலக்கண இலக்கிய நெறிச் சிறப்புடைய தமிழ் மொழியில் குறைந்து தான் காணப்படுகின்றன. அதே நேரம் இலக்கண இலக்கிய நெறிச் சிறப்பு அமையப் பெறாத நாகர்களின் மொழியில் இச் சிதைவுகள் சற்று அதிகமாகத் தாக்கம் பெறுவதால் அவர்கள் வாழும் வட்டாரச் சூழலுக்கு ஏற்பச் சற்றே அதிக மாறுதல்களைக் காண வாய்ப்பு உண்டு. ஆனாலும் நாகர்களின் மூலமொழி ஒன்றாகத்தான் இருக்க முடியும். அதில் காணப்பெறும் கிளை அல்லது வட்டார மொழிகளை எண்களின் அடிப்படையில் பிரித்துப் பல மொழிகள் என்று கூறுவது பொருத்தம் அற்றது என்பது என் கருத்து. எனவே ஓர் இனத்துக்கு ஒரு மொழிதான் தாய் மொழியாக இருக்க முடியும் என்பதை மீண்டும் உறுதிசெய்ய விரும்புகிறேன்.

அடுத்துக் 'கள்' ஈறு குறித்துத் தொல்காப்பியம்கூட ஏதும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்கிறார் பேராசிரியர். இது தவறான செய்தி. தொல்காப்பியம், சொல்லதிகாரம் பெயரியலில் 15ஆம் நூற்பாவில் தொல்காப்பியர்.

'கள்'ளொடு சிவணும் அவ்வியற் பெயரே

கொள்வழி உடைய பலஅறி சொற்கே.

என்று 'கள்' ஈறு பற்றி மிகத் தெளிவாகக் கூறுகின்றார். 'கள்' எனும் இறுதிநிலையுடன் சேர்வதற்கு உரிய தன்மையுடைய இயற்பெயர்களுடன் 'கள்' ஈறு சேருமானால் அவை பன்மையாக அறியப்படும் என்பது இதன் பொருள். எடுத்துக்காட்டாக 'ஆ, குதிரை'. இவை இயற்பெயர். இவற்றுடன் கள் விகுதியிணைந்து 'ஆக்கள்' 'குதிரைகள்' எனப் பன்மை ஆகின்றன. அப்படி இருக்க தொல்காப்பியமே கள் ஈறு பற்றிக் கூறவில்லை என்பதும் சரியான செய்தியல்ல!

"கள் ஈறு சேர்க்கப்படாததெல்லாம் 'ஒருமை' தானெனில் 'மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும், மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்' என்று வரும் திருவள்ளுவமாலைச் செய்யுளுக்கு என்ன பொருள் சொல்வது? மூவேந்தர் என்பது ஒரு வேந்தரா?" என்று வினா எழுப்பியுள்ளார் பேராசிரியர் மார்க்சு.

செய்யுள் மரபில் ஒரு பெயர்ச் சொல்லுக்கு முன்னோ அல்லது பின்னோ எண் / எண்களை உணர்த்தும் சொல் ஆளப்படுமானால் அப்பெயர்ச் சொல் பன்மைத்தன்மையைப் பெற்றுவிடும். இதற்கு இலக்கியங்களில் ஏராளமான சான்றுகளைக் கூறலாம். இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். நிலம், நிலவு, பகலவன் இவை ஒன்று ஒன்றாக மட்டுமே இருக்கின்றன. தமிழ் என்ற மொழியும் ஒன்று தான். எனினும் தமிழின் பிரிவுகள் மூன்றாக இருந்தாலும் தமிழ் என்றும் முத்தமிழ் என்றும் தான் அழைக்கப் பெறும். அதாவது பிரிவுகளே இல்லாத நிலம், நிலவு, பகலவன் என்பவற்றைப் போல. ஆனால் மூன்று மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் எனக் குறிப்புப் பெயர்களால் சொல்லப் பெறும் காரணத்தால் அவர்கள் மூவேந்தர் என்ற பெயரில் பன்மையாகக் குறிப்பிடப் படுகின்றார்கள். எனவே மூவேந்தர் என்பது ஒருவரா இல்லை மூவரா என்ற வினாவுக்கே இங்கே இடம் இல்லை.

இனி, தொல்காப்பியம் *(395)*, நன்னூல் *(274)*, இலக்கண விளக்கம் *(175)*, முத்து வீரியம் *(51)*, இலக்கணக் கொத்து *(88)* நூற்பாக்களை மேற்கோள் காட்டி வடசொல்லை இணைத்துக் கொள்வதுதான் தமிழ் மரபு என்றும் தனித்தமிழ் / தூயதமிழ் என்பதே இரண்டாயிரம் ஆண்டுகால மரபை மீறிய முயற்சிதான் என்கிறார் பேராசிரியர்.

கழகக் காலத்திலேயே ஆரியம் தமிழகத்தினுள் நுழைந்துவிட்டது என்பதற்கு மேற்சொன்ன இலக்கண நூற்பாக்களே சான்று கூறுகின்றன.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

தொல் : 395

என்ற நூற்பா பேராசிரியர் நண்பர் மார்க்சு அவர்கள் சொல்வது போல வடசொல்லைத் தமிழ்ச் சொல்லோடு இணைக்க வேண்டும் என்று மரபுபற்றிச் சொல்லவில்லை. வடசொற் கிளவி என்று சொல்லப்படும் வடமொழிச் சிறப்பு எழுத்து தென்மொழிக்கும் பொதுவாகிய எழுத்தால் அமைந்து தமிழில் வரும்பொழுது அதை 'வடசொல்' என்றே சொல்ல வேண்டும் என்பதுதான் இந்நூற்பாவின் பொருள். பேராசிரியர் சுட்டிக்காட்டிய ஏனைய நூற்பாக்களும் இதையே சொல்கின்றன.

இந்த மொழிக் கலப்புதான் தமிழின் தூய்மையைக் கெடுத்தது. இதைக் கலப்புத் தமிழ் என்று சொல்லலாம். தமிழைச் சிறப்புச் செய்யத் தண்டமிழ் - வண்டமிழ் - தென்றமிழ் எனச் சொல்வது சரியே. ஆனால் தனித்தமிழ், தூயதமிழ் எனச் சொல்வது பயன் அற்றது. ஏனெனில் தமிழ் ஒன்றுதான். கலப்புச் சொற்கள் தமிழில் நிறைந்ததால் பிற்காலத்தில் தனித்தமிழ், தூயதமிழ் எனச் சொல்லி உணர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. எனவே புலவர் இளங்குமரனார் தனித்தமிழ், தூயதமிழ் என்று கூறாமல் விடுத்ததில் தவறு ஏதும் இல்லை.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல் பற்றி நான் கூறியதில் பெருங்குழப்பம் உண்டு என்கிறார். அப்படி எக்குழப்பமும் இல்லை. மிகச் சுருக்கமாகச் சொல்வதானால் அது திசைச்சொல் என்று இயற்றமிழ் போல் இல்லாமையால் கொடுந்தமிழ் என்று சொல்லப்பட்டது. **பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள்** "பவுத்தமும் சமணமும் தமிழகத்திற்குள் வந்து புகுந்ததும் பாலி மொழியும், சமணர் மொழியாகிய சமற்கிருதமும் அவர் சமய விரிவுரைகளிலும், அவர் எழுதிய சமய நூற்களிலும் வறிதே கலக்கப்பட்டன. வடமொழியைக் கலந்தே சமணர் எழுதினர். அவரால் தோற்றப் பெற்றதே மணிமிடை பவளம் என்ற மணிப்பிரவாளநடை. அவரது சமய நூலாகிய **'ஸ்ரீ புராணம்'** என்னும் சமணநூல் முழுதும் இவ்வழி நடையிலேயே இயற்றப் பெற்றது. **'.... மற்றொருநாள் வித்யாதி தேவதா பூஜா வ்யாஜத்தினால் ஒரு த்யானம் அடைந்து ஏகாந்தமாகத் தனது ஸ்வபா ரூபத்தைக் காட்டிப் பின்னரும் விச்வா ஸர்த்தமாகச் சூர்ண விவாத வ்ருத்தாந்தத்தினையுஞ் சொல்லிக் கரதல ஸ்பர்சன ஸுகம் அநுபவித்தபின்...'** - என்பது அவரது வர்த்தமானர் புராணத்தினின் றெடுக்கப்பட்ட ஒரு சொற்றொடறாகும்..." என்று விளக்கும் பாவலர் ஐயா அவர்கள் இதனை, **'மல்லிகை மலர்க் குவியலுக்கு இடையே புல்லி எருக்கம்'** - எனச்சாடவும் செய்கின்றார். **(தென்மொழி : 15-4-1960, இயல் - க இசை - கக)**

மேலும் பன்னிரு நிலம் என்று பண்டையப் புலவோரால் சுட்டிச் சொன்னது அக்கால நிலவியல் நாட்டு அமைப்பை ஒட்டியே. 'காவிரிக்

கரையை ஒட்டிய அரசுருவாக்க நடுவண் பகுதியே செந்தமிழ் நிலம். அவர்கள் வழங்கும் சொல்லே இயற்றமிழ்ச் சொற்கள்' என்பது ஏற்புடையதன்று. இன்று அனைத்து மக்களிடையேயும் திசைச்சொற்களும், இயற்சொற்களும் கலந்தே இருக்கின்றன. அதனால் யார் மேலான தமிழ் பேசுகின்றனர்? யார் 'கீழான' தமிழ் பேசுகின்றனர்? அந்த மக்கள் யார்? என்ற பேராசிரியர் அவர்களின் வினாக்கள் தவிர்க்கப்பட வேண்டியவையே!

இறுதியாக, பேராசிரியர் சொல்வது போல 'பன்மைத் தன்மைகளை அழித்து மற்றவர்களின் அடையாளங்களை மறுத்து ஒருமைக்குள் ஒடுக்குவது அதிகாரத் தன்மைக்கும், கொடுக்கோன்மைக்கும் வழிவகுக்கும்' - என்பது சரியே! 'இந்து, பாரதம் என்கிற அடையாளத்திற்குள் ஒடுக்க முனைவது போல' என்பதும் சரியே! ஆனால் தமிழ் என்ற அடையாளம் எதை ஒடுக்க முனைகிறது? பேராசிரியர் சொல்லவில்லையே? தமிழ் என்பது ஒருமையாகவும் பன்மையாகவும் இயங்கக் கூடியது. இது தமிழின் சிறப்பு - தமிழரின் பெருமை. தமிழ் - தமிழர் என்ற தனி அடையாளங்கள் எவ்வகையானும், அதிகாரத் தன்மையாகவும், கொடுங்கோன்மையாகவும், வன்முறையாகவும் நடைபயிலாது. இந்த அடையாளங்களுடன் தான் **ஆதித் தமிழர் பேரவை** அமைக்கப் பெற்றுள்ளது, என்பது என் மறுப்புக்கு உரிய செய்தியாகும். தமிழ் - தமிழர் என்பது வன்முறை அடையாளங்கள் என்றால், **உலகத் தமிழ்க் கழகம், பாவாணர் தமிழ்க்குடும்பம் தமிழ்மன்றம், தமிழ்க்கழகம்** இவற்றைப் பேராசிரியர் எப்படிக் கணிக்கிறார். 'ஆதித்தமிழர் பேரவை' அமைத்து மீதித்தமிழரிடமிருந்து தமது தனித்தன்மையை நிறுவ முனைகிறார் - என்னும் மார்க்சு அவர்களின் வரிகளில் ஏதோ ஓர் இடிபாடு இருப்பதாக தோன்றுகிறது. **- எழில் இளங்கோவன், சென்னை**

ஒழுங்குபடுத்துவோம்!

அன்புடையீர்,

'தென்மொழி' மக்களவையில், 'தமிழ்கள்' பற்றிய விளக்கங்கள், மறுவிளக்கங்கள் கண்டேன். அவற்றிலிருந்து எனக்குப்பட்டனவற்றை எழுதுகிறேன். குமுகாய மாற்றப் புரட்சிக்குப் பாட்டாளி வகுப்பு (வர்க்கம்)தான் தலைமை தாங்க முடியும். படித்தவர்களாக நடுத்தட்டு வகுப்பிலே (வர்க்கத்திலே) உள்ளவர்கள் தலைமை ஏற்க, தலைமை ஆக முடியாது என்பதனை உணராததன் விளைவே இந்த 'மணல்கள்', 'தண்ணீர்கள்', 'சோறுகள்', 'திருக்குறள்கள்' போன்ற அணுவைப் பிளக்கும் வேலைகள்! இன விடுதலையையும், பாட்டாளி வகுப்பு (வர்க்க) விடுதலையையும் பிரித்துப் பார்க்க முடியாதவை என்ற நிலையிலிருந்து நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் வேலைகளைச் செய்வோம்.

- மு. சோசப்தனராசு, தேவாரம்.

தமிழினம் கெடவோ தமிழ்ப்படங்கள்?

இன்தமிழ் மொழிப்பெயரில்
என்னென்ன திரைப்படங்கள்
எடுக்கின்றார் நாட்டில் தம்பி!

நின்றவற்றின் ஒன்றையேனும்
நீநிமிர்ந்து பார்த்ததுண்டா?
நெஞ்சொடிய நிலத்தில் வீழ்வாய்!

ஒன்றுமுயர் செந்தமிழில்
உருப்படியாய்ப் பெயர்வைக்கப்
பட்டில்லை! ஒன்று கூட

நன்றுதமிழ்ப் பண்பாட்டில்
நனைந்ததுவாய்த் தமிழினத்தை
வளர்த்தெடுக்கும் நன்மைக் கில்லை!

சாதிகளைப் புதுப்பிக்கும்
சாய்க்கடைக் கழிவறையில்
தாம்வீழ்ந்த கதைகள்! நம்மைப்

பாதியிலே பிடித்தவையாம்!
பார்ப்பனிய மாயையினைப்
பரப்புகின்ற கதைகள்! முடச்

சேதிகளை மடமைகளைத்
திணித்தறிவைக் கெடுக்கின்ற
சிழ்அழுகல் கதைகள்! நம்மின்

'வீதி'யிலே படங்களிவை!
வீழ்ந்தஇனம் எழுந்திடுமா?
விளைந்திடுமா வெற்றி இங்கே?

படத்திலுரை யாடல்களைப்
பார்த்தாயா? நல்லதமிழ்ப்
பாங்கில்லை! நடையும் இல்லை!

இடக்கிருக்கும் கொச்சைமொழி!
இழிவழக்குப் பேச்சுரைகள்!
இருந்தமிழைச் சிதைக்கும் சொற்கள்!

வடமொழிச்சொல் ஆரவாரம்!
வாய்கிழிய ஆங்கிலங்கள்!
வரிசைகெட்டு மலிந்தி ருக்கும்!

தடம்தவறிப் போகுமிவை
தமிழ்நாட்டில் திரைப்படங்கள்!
தமிழரினை உயர்த்தற் கில்லை!

முக்கலொலி! முனகலொலி!
மூக்கொலிகள் தாம்இசைகள்!
முடைநாற்ற வீச்சைப் போலும்

கக்கலொலி! கழிச்சலொலி!
கத்தலெல்லாம் இன்னிசைகள்!
கழுதைகளின் கதைப்பு! பெட்டைக்

குக்கலொலி! விக்கலொலி
கூடஇங்கு மெல்லிசைகள்!
கோட்டான் தாம்கு யில்கள்!

நக்கலொலி நாட்டாண்மை
நடுவிருக்கும் தமிழ்ப்படங்கள்!
நமக்குய்வும் உண்டோ? சொல்வாய்!

பாட்டெடுத்தால் அழகுண்டா?
பார்! தம்பீ, நமதுதமிழ்ப்
பண்பாட்டைக் குலைக்கும் சொற்கள்!

பாட்டெதிலும் தெளிவில்லை!
பளிச்சென்று கருத்தில்லை!
பயனற்ற சொற்கள்! ஐயோ!

பாட்டுவரும் காட்சிகளோ
படத்திலொட்டா வகையிருக்கும்!
பித்தர்களின் உளறல் போலும்!

ஊட்டிவந்த செந்தமிழின்
உருவழிக்கும்! இவையாநம்
உயிருணர்வை வளர்த்தெ டுக்கும்?

உணர்ச்சிவழி இசையமைப்பில்
ஒருபாட்டும் அமைந்தில்லை!
உணர்வுவெளிப் பாடே இல்லை!

புணர்ச்சியில்லா இரைச்சலிலே
போட்டடுக்கும் சொற்களிலே
புனைந்திருக்கும் இசையில் பாட்டு!

பிணத்தினைப்போல் பல்லிளிக்கும்!
பிழையான படங்களிங்கே!
பீடிழந்த இவற்றால் நம்மின்

குணமணங்கள் வெளிப்படுமா?
குடிநலங்கள் துலங்கிடுமா?
கொழித்திடுமா கலைந லன்கள்?

கொலைகளவு! கற்பழிப்பு!
கொள்ளைகளின் நுணுக்கங்கள்!
கொடுங்கயமைக் கீழ்ச்செ யல்கள்!

விலைமகளிர் பரத்தமைகள்
விளம்பரம்தாம் படம்முழுதும்!
வெளிச்சம்போட் டிருக்கும்! மக்கள்

நிலையுயர்த்தும் கொள்கையில்லை!
நேர்மை, மெய் உழைப்பில்லை!
நெடுமுயற்சி வாழ்க்கை இல்லை!

மலைநிகர்த்தும் தமிழரின்தோள்
வல்லமைகள் அங்கில்லை!
வளர்தலெங்கே தமிழர் இங்கே?

கொம்புகிளை தாவுகின்ற
குரங்குகளின் செய்கையெல்லாம்,
குறும்பெல்லாம் இங்காட் டங்கள்!

வம்பசொறி யுடற்கையன்
மரமரவென் றுடல்சொறியும்
வாகெல்லாம் இங்காட் டங்கள்!

நம்பவரா நோய்காக்காய்
வலிப்புடையோன் கால்கைகள்
உதைப்பெல்லாம் இங்காட் டங்கள்!

செம்மையில்லா இவைஎல்லாம்
திரையினில்இன் றாட்டங்கள்!
சீர்படுமா இளையோர் கூட்டம்?

வீழ்ந்தவர்நாம்! எழுவதற்கு
மீள்வதற்குப் படங்களில்லை!
வேற்றவரால் குமுகா யத்தில்

தாழ்ந்தவர்நாம் ஆனநிலை
தகர்க்கஒரு புரட்சிக்குச்
சரியாகப் படங்கள் இல்லை!

சூழ்ந்திருக்கும் பகைநொறுக்கத்
துடித்தெழுமோர் மறத்தனத்தைச்
சொல்லுவிக்கும் படங்கள் இல்லை!

வாழ்ந்தவர்நாம்! வையத்தை
ஆண்டவர்நாம்! வரலாற்றை
மலர்த்துவிக்கும் படங்கள் இல்லை!

ஆடைகளும் அரைகுறைதாம்!
அம்மணர்தாம் இல்லைஎனும்
அளவினிலே அருவருப்பே!

மேடைகெடப் படம்முழுதும்
மேல்நாட்டு நாகரிகம்!
வேண்டாத காட்சி கள்தாம்!

தாடையினில் போட்டெவனைத்
திருத்துவது? தமிழ்ப்படங்கள்
செய்வானுக் கில்லை மானம்?

கூடையிலே அள்ளித்தான்
கொட்டவேண்டும்! 'கூற்றிவன்கள்'
கொஞ்சுதமிழ் மண்ணுக் கிங்கே!

ஆடுகின்ற ஆட்டங்கள்
அமைதிதரு மாறில்லை!
அகமகிழ்ச்சிக் குதவ வில்லை!

போடுகின்ற ஆட்டங்கள்
புரிந்துகொள்ளு மாறில்லை!
பொருத்தமுடன் ஒன்றும் இல்லை!

ஓடுகின்ற தமிழ்ப்படத்தில்
உள்ளஇவை ஆட்டங்கள்
ஒன்றிலேனும் மெய்ப்பார் டில்லை!

சாடுகின்ற படியிருக்கும்!
தறுதலைகள் கோணங்கித்
தனங்களெல்லாம் ஆட்ட மாமே!

குலமோங்க வழியுரைக்கும்
குறிக்கோளில் படங்களில்லை!
குணமோங்கப் படங்கள் இல்லை!

நலமோங்க அறஞ்சொல்லும்,
நம்மானத் திறமோங்க
நல்லவழிப் படங்கள் இல்லை!

நிலமோங்க, தமிழரினம்
நீள்உலகில் நெடிதோங்க
நிறைவாழ்வுப் படங்கள் இல்லை!

வலமழிக்கத் தானாநம்
தமிழ்ப்படங்கள்? அவற்றைத்தித்
தணலிட்டுக் கொளுத்து வோமே!

- பாவலர் இளஞ்சித்திரன்

செய்திகள்

(பாவலரேறு ஐயா அவர்கள் உடல் நலங் குன்றி மருத்துவ மனையில் இருந்த நிலையில் ஐயா அவர்கள் முன்னர்ப் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் பல தென்மொழியில் வெளிவராமல் இருந்தன. கையெழுத்துப் படிகள் கோப்பில் ஐயா அவர்கள் எழுதிவைத்திருந்தனவும் விடுபட்டனவுமான அச் செய்திகள் ஈண்டு இடம்பெறுகின்றன. - ஆசிரியர்.)

1. தமிழர் மாநாடு - ஒசூர்

தி.பி. 2026, திசம்பர் 25, 26.12.95 ஆகிய நாள்களில் ஒசூர், வட்டாட்சியர் சாலையில், பாகலூர் வள்ளுவர், இலக்கிய மன்றச் சார்பாக 'புலவர் கிழார் அரங்கில்' இந்தி வல்லாண்மை எதிர்ப்புப் போரில் உயிர் நீத்த ஈகிகள் நினைவாகத் தமிழர் மாநாடு நடைபெற்றது. திரு. வெ.ஆறுச்சாமி அவர்கள் தலைமையேற்று நடத்தினார். தமிழ் - தமிழர் - தமிழ்நாடு - தலைப்பில் கருத்தரங்க நிகழ்வு நடைபெற்றது. நிகழ்ச்சியில் தூய தமிழ் சொல்லாய்வு அறிஞர் ப.அருளியார் அவர்கள் உரையாற்றினார். பெ.மணியரசன், வே.பொன்னையன் ஆகியோரும் உரையாற்றினர். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள் பேருரையாற்றினார்கள். திருவாளர். செல்வேந்திரன், கோவை. கு.இராமக்கிருட்டிணன் ஆகியோரின் உரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

2. அரசு பொறியியற் கல்லூரி நிகழ்ச்சி - சேலம்

கடந்த தி.பி. 2026, கும்பம் திங்கள் 10 ஆம் நாள் (22-2-95) அன் சேலம் அரசு பொறியியற் கல்லூரியில் இலக்கியச் சோலை என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் துணை முதல்வர் முனைவர். இ.இராமசாமி அவர்கள் விழாத் தலைவராக இருந்தார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். மற்றும் புலவர். தமிழேந்தி அவர்களும் உரையாற்ற நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

3. திருவள்ளுவர் விழா - கள்ளக்குறிச்சி

கடந்த தி.பி. 2026, கும்பத் திங்கள் 14 ஆம் நாள் (26-2-95) அன்று கள்ளக்குறிச்சி - ஊராட்சி ஒன்றியப் பெண்கள் தொடக்கப் பள்ளியில் கல்லைத் தமிழ்க் கழகச் சார்பாகத் திருவள்ளுவர் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் இரா. நல்லமுத்து அவர்கள் வரவேற்புரையாற்ற, திருவாளர்கள் ச.இலியாகத் அலி, தங்க. கார்த்திகேயன், நல். இராமலிங்கம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. இரா. மூக்கப்பன் அவர்கள் திருவள்ளுவர் படத்திறப்புச் செய்தார். உலகத்தமிழின முன்னேற்றக் கழகத் தலைவரும்

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆசிரியருமான நம் பாவலரேறு ஐயா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திரு. வை.ந. பழனியப்பன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

4. நீத்தார் நினைவு படத்திறப்பு - தஞ்சை

கடந்த தி.பி. 2026, கும்பத் திங்கள் - 19 ஆம் நாள் (3-3-95) அன்று, புலவர். இரத்தினவேலு அவர்களின் சாணூரப்பட்டி இல்லத்தில் அன்னாரின் அன்னையார் இரத்தின. தெய்வானையம்மாள் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் ப.கலியபெருமாள் அவர்கள் தலைமையேற்றார். தமிழ்த்திரு. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் படத்திறப்புச் செய்து, இரங்கல் உரையாற்றினார்கள். மற்றும் திருவாளர்கள் இராசப்பா, பெமணியரசன், பொன். கலியமூர்த்தி ஆகியோரும் மற்றும் பலரும் இரங்கல் உரையாற்றினார்கள். கோவி. பால்ராசு அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

5. ந. கோவிந்தராசு - த. மகேசுவரி - வாழ்க!

கடந்த தி.பி. 2026, மீனம் திங்கள் 22-ஆம் நாள் அறிவன் கிழமை (5-4-95) அன்று திருவண்ணாமலை அபிராமி திருமணக் கூடத்தில் சாத்தனூர், சி.நடேசன் - அலமேலம்மாள் இணையரின் அன்பு மகன் ந.கோவிந்தராசுக்கும், தனம் - ஆஞ்சனாதனம் - இணையரின் மகள் த.மகேசுவரிக்கும், உ.த.மு.க முதல்வரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆசிரியருமான பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் தலைமையில் திருமண நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தேறியது. நிகழ்ச்சியில் ந.கண்ணன் அவர்கள் வரவேற்புரையாற்ற, சாத்தனூர் மு.ஆறுமுகம், ஆ.இராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. வி.அன்னையன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

6. மீ.இரா. செல்வஅரசு - இரா.க. யாழினி - வாழ்க!

கடந்த தி.பி. 2026 மேழம் திங்கள் 10 - ஆம் நாள் (23-4-95) அன்று அருப்புக்கோட்டை 'செய விலாசு' திருமண மண்டபத்தில், க.து.சொ. இராமசாமி - இலெ.ச. இராமலக்குமி இணையரின் அன்பு மகன் மீ.இரா. செல்வ அரசுக்கும், கா.மு. கருப்பசாமி - வ.கா. இராதா அம்மையார் இணையரின் மகள் இரா.க. யாழினிக்கும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் தலைமையில் திருமண நிகழ்வு மிகச் சிறப்பாக நடந்தேறியது.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் செய்திகள்

பொதுக்குழு - பொதுச் செயலாளர் தேர்வு

தி.பி. 2027, துலை 25 (10.11.96) ஞாயிறன்று திருச்சி அரசு அலுவலர் ஒன்றியக் கழக அலுவலகக் கட்டிடத்தில் உ.த.மு.க பொதுக்குழுக் கூட்டத்தை முன்னாள் பொதுச் செயலாளர் திரு. பறம்பை அறிவனார் அவர்கள் கூட்டினார்.

உ.த.மு.க பொதுக்குழு உறுப்பினர்களின் கருத்துரைகளுக்குப்பின் பொதுச் செயலாளர் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் ஆணையராகத் திரு மா.தமிழ்க்கதிர் அவர்கள் பொறுப்பேற்றார். திரு பறம்பை அறிவன் அவர்களும் திரு மா.செ. தமிழ்மணி அவர்களும் முறையே திரு ப.அறவாழி, திரு வ.நா. தன்மானன் ஆகியோரால் முன்மொழியப்பெற்று பொதுச் செயலாளர் பொறுப்பிற்கு வேட்பாளர்களாக நின்றனர். திரு.மா.செ.தமிழ்மணி அவர்கள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார். உ.த.மு.க இயக்கம் அமர்த்த முறையில் இருந்து குடியாட்சி முறைக்கு மாறியுள்ளதைத் திரு பறம்பை அறிவன் அவர்கள் வரவேற்று வாழ்த்திப் பேசினார்.

அன்று நடந்த பொதுக்குழுக் கூட்ட முகாமையான தீர்மானங்கள் வருமாறு

1. உ.த.மு.க முன்னாள் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பல்லடம் ஆறுமுகனார் மற்றும் உ.த.மு.க துணைச் செயலர் திரு. தி.மு. அரசமாணிக்கனாரின் துணைவியார் ஆகியோர் மறைவிற்குப் பொதுக்குழு இரங்கல் தெரிவிக்கிறது.

2. பொதுக் குழுவில் முன் வைக்கப்பட்ட கருத்துகளை அச்சிட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்.

3. இயக்கத்திற்கு நெறிக்குழுவை உருவாக்கிக் கொள்ளவும் துணைப் பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோரை இடைக்காலமாக அமர்த்திக் கொள்ளவும் பொதுச் செயலாளர்க்குப் பொதுக்குழு முழு உரிமையை வழங்குகிறது.

4. தமிழக மாவட்டங்கள் முழுவதும் கிளைகள் தொடங்கிய பின்பு குடியாட்சி முறைப்படி துணைப் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. பாவலரேறு வழியில் தமிழின முன்னேற்றத்திற்கு தொடர்ந்து உழைப்பது.

இதனைத் தொடர்ந்து உ.த.மு.க நெறியாளர் குழுக் கூட்டங்கள் தஞ்சையில் கடந்த நளி 28 (13.12.1996) வெள்ளியன்றும் கடந்த சிலை 21 (5.1.1997) அன்று புதுவையிலும் நடைபெற்றன.

புதுவையில் கூடிய உ.த.மு.க நெறியாளர் கூட்டத்தில் பொதுச் செயலாளர் திரு. மா.செ.தமிழ்மணி, திருவாளர்கள் தி.மு.அரசமாணிக்கனார், ப.அருளி, மா.பூங்குன்றன், கண்ணன், அதியமான் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். திருவாளர்கள் ம.இலெ. தங்கப்பா, இரா. திருமுருகனார், இரா.வடிவேலனார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகவும் அறிவுடைநம்பி, வெற்றிவேந்தன், வநா.தன்மானன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந் நெறியாளர்குழு கலந்து ஆய்ந்து நிறைவேற்றிய முகாமையான தீர்மானங்கள் வருமாறு

1. உ.த.மு.க விற்கு வாழ்நாள் சிறப்புத் தலைமை ஏற்குமாறு அம்மை தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இசைவு பெற்று அமர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

2. 'தமிழ்நிலம்' இதழை அம்மை தாமரை பெருஞ்சித்திரனார் சிறப்பாசிரியராகவும் இருந்து ஆசிரியர் குழுவொன்று அமைத்து வெளிக் கொண்டுவருவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆசிரியர் குழுவில் திருவாளர்கள் மா.செ.தமிழ்மணி, தி.மு. அரசமாணிக்கனார், கண்ணன், அதியமான், மா.பூங்குன்றன், இரா.வடிவேலனார், வெற்றிவேந்தன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இதழ் வெளி வருவதற்குரிய அளவில் நிதிக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அக் குழுவில் திருவாளர்கள் மா.செ.தமிழ்மணி, தன்னொளியன், அதியமான், அறிவுடைநம்பி ஆகியோர் அடங்கியுள்ளனர்.

3. உ.த.மு.க வின் ஏழு துறைகளின் செயலகங்கள் புதுப்பிக்கப்பெற்றுத் துறைச் செயலாளர்களை அமர்த்துவது. ஆறு திங்களுக்கு ஒருமுறையும் தேவையான போதும் செயலாளர்கள் கூடிக் 'கொள்கைகளின் செயல்வடிவங்களை உ.த.மு.க செயலாற்றப் பொதுச் செயலாளரிடம் ஒப்படைப்பர்.

மா.செ. தமிழ்மணி
பொதுச் செயலாளர், உ.த.மு.க.
37, இராசாசித் தெரு, திண்டிவனம் - 604 001.

நமக்கு வந்த மடல்கள்.

அன்புடையீர், வணக்கம்!

15.12.96 அன்று வெளியாகியுள்ள - ஆனந்தவிகடன் - கிழமை இதழில், 'விலகி நிற்போம்' என்னும் தலைப்பில் தேவையே இல்லாத, இருந்தாலும் இறுமாப்பான ஆசிரியவுரை ஒன்று எழுதப்பட்டுள்ளது. அதில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்பது தமிழ்நாட்டில் இனி நடைமுறைப்படுத்த முடியாத (சாத்தியப்படாத) ஒன்றாம்! முற்றுப்புள்ளி விழுந்துபோன, ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட செய்தியாம்! இதற்குக் காரணம் இராசீவ் காந்தி கொலை அவர்களால் செய்யப் பட்டதாம்!

இப்படி எழுதும் நகையாடி 'விகடன்' ஆசிரியர், ஈழச் சிக்கலை (பிரச்சனை)யும் விடுதலைப் புலிகளையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாது என்பது தமிழக மக்களுக்குத் தெரியாமல் இல்லை என்றும் எழுதுகிறார்.

அந்த ஆசிரியவுரையே ஏன் எழுதப் படுகிறது என்றால், பாட்டாளி மக்கள் கட்சி சென்னையில் நடத்திய ஒரு மாநாட்டில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக, - ஒலிபெருக்கி (மைக்) புலிகள் முழக்கமிட்டார்களாம்! எந்தத் துணிச்சலில் என்பது தான் கேள்வியாம்!

இந்த ஆனந்த விகடன் போன்ற ஏட்டுப் புலிகள், ஏடுகளில் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஓயாமல் ஓலமிடும்போது, பாட்டாளி மக்கள் போன்ற நாட்டுப்புறத்துப் புலிகள் - ஒரு சில முறைகளாவது, - தம் ஈழத்து மண்ணுக்கும் மக்களுக்கும் விடுதலை, உரிமை வேண்டி, உடல், பொருள், ஆவியை இழந்துவரும் விடுதலை புலிகளுக்காக - ஓரிரு மாநாடு, கூட்டங்கள் போடக் கூடாதா? ஈழத்தமிழினமே இலங்கையில் சிங்கள இனவெறியரால், அழிக்கப் படும்போது 'விலகி நிற்போம்' என்றால் எப்படி? சிங்கள இனவெறிப் படை வீரன் - திரு இராசீவ் காந்தியை அரச வணக்க(Guard of Honour) செய்யும் நேரத்தில் வேட்டெஃகத்தால் புறடியில் அடித்த போதே - அவர் இறந்து போய் இருந்தால் - இந்தத் தாள் புலிகள் என்ன செய்திருக்கும்? விலகி நிற்குமா?

அன்பன் **திருமுடி. முல்லையூர்**

பேரன்புடையீர், வணக்கம்.

தென்மொழி இதழ் சுவடி : 28, ஓலை : 11. திபி. 2027 நளி இதழ் பக்கம் (14) கச இல் அமார்க்சு என்பார் தவறான ஒரு கருத்தைக் கூறியுள்ளார்.

'கள்' ஈறு குறித்துத் தொல்காப்பியம் கூறவில்லை என்று, அதிர்ச்சியாக உள்ளது.

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பல்வரி சொற்கே

- சொல் : பெயரியல் : 169 ஆம் நூற்பா தெளிவாகப் பன்மை பற்றிய செய்தியில் கள் விகுதி பற்றிக் கூறியுள்ளது. தென்மொழி இது குறித்து ஏதும் குறிப்பிடாமல் அப்படியே அச்சிட்டுள்ளது வருத்தமூட்டுகிறது. இந்தத் திருத்தத்தை அல்லது மறுப்பை வெளியிட வேண்டுகிறேன்.

அன்புடன் **பாலு**, திண்டுக்கல் - 5.

வெளிவந்துவிட்டது !

இவ்வாண்டுக்குரிய

தென்மொழி நாள்காட்டி

தி.பி. 2028
(கி.பி. 1997)



பாவலரேறு ஐயா அவர்களின் மிடுக்கான எழிலார்ந்த வண்ணப் படம் வழவழப்புத்தாளில் அழகிய முறையில் அச்சிடப்பெற்றுள்ளது.

ஒவ்வொரு தமிழ் மாதத்திற்கும் தனித்தனித் தாளில் தமிழ் ஆங்கில மாதங்கள் இணைந்து அச்சேறியுள்ளது.

தென்மொழி இயக்கக் குறிப்புகள், பாவலரேறு அவர்களின் பொதுவாழ்வுக் குறிப்புகள், பிற முகாமையான வரலாற்றுக் குறிப்புகள், ஐயா அவர்களின் அருங்கருத்துகள் மற்றும் பாவரிகளில் சிற்சில, பெருமக்கள் சிலரின் கருத்துரைகள் முதலியன இந் நாள்காட்டியில் இடம்பெற்றுள்ளன.

விலை உரு. 15/- (நேரில்)

விலை உரு. 25/- (பதிவஞ்சலில்)

பத்துப் படிகளும் அதற்கு மேலும் வாங்குவோர்க்கு பத்து விழுக்காடு கழிவு உண்டு.

- அமைச்சர், தென்மொழி